விலை : 20.00 website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 04 செவ்வாய்க்கிழமை (17.04.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

தருமபுர பொலிஸ் பிரிவு

## விடந்தையடி பகுதியில் 2 துப்பாக்கிகள் மீட்பு

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் பரந்தன், முல்லைத்தீவு ஏ34 வீதியில் உள்ள வீதியில் புளியம்பொக்கணை விடந்தையடி பகுதியில் உள்ள லம்போ 24

அலரி விதை உட்கொண்ட

## 5 பெண் பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அலரி விதையை உட்கொண்ட ஐந்து பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. 23

மதுபானத்துடன்

## கிருமிநாசினி அருந்திய குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சிறுநீரக நோயின் இயலாமை காரணமாக மதுபானத்துடன் கிருமி நாசினி அருந்திய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயி 23

மகிந்த ஆதரவு பொது எதிரணியில் மாத்திரமல்ல

# நல்லாட்சி அரசிலும் இனவாதிகள் உள்ளனர்

## யாழில் இடம்பெற்ற தேசிய சித்திரை புத்தாண்டில் அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்) மகிந்த ஆதரவு பொது எதிரணியில் மாத்திரமல்ல நல்லாட்சி அரசாங்கத்துக்குள்ளும் இனவாதிகள் உள்ளனர் என தேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். யாழில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தேசிய சித்திரை புத்தாண்டு விழாவில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (23-ம் பக்கம்...)

முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த கைது

## பிணை கிடைத்தும் நிபந்தனை நிறைவேற்றாததால் மறியல்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் தற்போது கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்தானந்த அளுத்கமகே பிணை நிபந்தனைகளை நிறைவேற்றாத நிலையில் இன்றுவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்று உத்தரவிட்டது. 23

## விடுவிக்கப்பட்ட வலி.வடக்கில் ஆபத்தான வெடி பொருட்கள்

அவதானித்தால் தெரியப்படுத்துமாறு இராணுவத்தினர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலி.வடக்கில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பொதுமக்களது காணிகளில் ஆபத்தான வெடி பொருட்கள் பல அகற்றப்படாமல் விடப்பட்டுள்ளதை காண கூடியதாகவுள்ளது. 23

## பல்கலைக் கழகங்கள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இன்றைய தினம் வழமை போல் ஆரம்பமாகவுள்ளன.

அரச பல்கலைக் கழகங்களில் கல்வி சாரா ஊழியர்கள் சம்பள அதிகரிப்பை கோரி கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக பல்கலைக் கழகங்களில் கற்றல் நடவ 23

வவுனியா நகரசபையில் கூட்டணி ஆட்சி

## சபையை இழந்ததையடுத்து கூட்டமைப்பினர் தமது கட்சி முக்கியஸ்தர்களுடன் முரண்பாடு

நகரசபை வளாகத்தில் நேற்று குழப்பநிலை

(நெடுங்கேணி)

வவுனியா நகரசபையில் பெரும்பான்மை பெற்றிருந்த தமிழரசுக் கட்சி தோல்வியடைந்து சபையை தமிழர் விடுதலைக் கூட்டணி கைப்பற்றியதையடுத்து நகரசபை வளாகத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

சபையை இழந்த கூட்டமைப்பினர் தமது கட்சி முக்கியஸ்தர்களுடன் முரண்பட்டுக் கொண்டனர். யாழ்ப்பாணத்தில் தேசியக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைத்துவிட்டு, வவுனியாவில் ஏன் எம்மை கைவிட்டீர்கள் என அங்கு வந்திருந்த கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், மற்றும் வட மாகாண சபை 23

அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்த

## 6 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஏற்றுக்கொள்ள தயாராகவுள்ளேன்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சுப் பதவிகளில் இருந்து இராஜினாமா செய்துள்ள 6 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தன்பக்கமாக ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி 23

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில்

## கைச்சாத்திட்ட அனைவரையும் கைது செய்ய அரசாங்கம் சதி

பந்துல குணவர்த்தன குற்றச்சாட்டு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தது. இதனால் பல்வேறு வழிகளிலும் நெருக்கடிகளை சந்தித்த அரசாங்கம் பழி 23

புத்தாண்டில் இடம்பெற்ற வாகன விபத்தில்

## 12 பேர் பலி; 69 பேர் படுகாயம்; 140 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

புதுவருட தினத்தில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 12 பேர் உயிரிழந்ததோடு, 69 பேர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.


சனிக்கிழமை மாலை 6 மணி முதல், ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி வரையான 12 மணித்தியாலங்களில் இடம்பெற்ற விபத்துகளில் 22 பேர் படுகாயமடைந்ததோடு, 47 பேர் சிறிய காயங்களுக்கு உள்ளானதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

17 விபத்துகளினால் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தக் 23

யாழ். கோட்டையில் அமைந்துள்ள

## தேவாலயத்துக்குச் செல்ல இராணுவம் அனுமதி மறுப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கோட்டையில் அமைந்துள்ள பழமை மிகுந்த கத்தோலிக்க தேவாலயத்தை சுற்றுலா பயணிகள் பார்வையிடுவ 23

# கண்ணீர் அஞ்சலி



## மங்காது ஒளிவீசிய கலையரசி

# அமரர் லீலாம்பிகை செல்வராஜா

## (முதுநிலை தேர்வுநடுவர் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்)

அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் முதுநிலை தேர்வுநடுவர், ஈழத்தின் புகழ்பூத்த முதுநிலை நடன ஆசிரியர் அமரர் லீலாம்பிகை செல்வராஜா அவர்களின் மறைவுச்செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்துள்ளோம்.

ஈழத்தில் மட்டுமல்லாமல் புலத்திலும் மங்காது ஒளிவீசிய கலையரசி அமரர் லீலாம்பிகை செல்வராஜா அவர்கள் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் தனது இறுதிக்காலம் வரை அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் முதுநிலை தேர்வுநடுவராக இருந்து மிகச்சிறப்பாகச் செயற்பட்டவர். புலம்பெயர் நாடுகளில் வேற்றுமொழி பண்பாட்டுச்சூழலில் வாழும் தமிழர்களிடையே தமிழர்களின் இன அடையாளமாகக் கருதப்படுகின்ற மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களை அழியவிடாமல் பாதுகாப்பதில் அயராது உழைத்தவர். மாணவர்கள் தமிழ்க்கலையினை ஆர்வத்தோடு கற்பதற்கு ஏற்ற வகையிலும் தொடர்கல்விக்கு உதவியாகவும் நடன சாரம், ஆடற்கலை, பரத நாட்டியம் கற்பித்தல் முறைகள் போன்ற நூல்களினை வெளியிட்டு பரதக்கலையின் வளர்ச்சிக்கு பெரும் துணையாக இருந்தவர்.

கட்டாயமாக ஓய்வு தேவைப்பட்ட காலங்களில் கூட உடல் நலத்தினையும் பொருட்படுத்தாமல் ஐரோப்பிய நாடுகளிற்கு வருகைதந்து அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தின் தேர்வு நடுவராகக் கடமையாற்றியவர். வேற்றுநாட்டவரும் எமது மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்து கொள்ள வேண்டுமென்பதில் அதிகமாகப்பாடுபட்டவர்.

இவ்வாறு கலை உலகத்திற்காக அயராது உழைத்த உலகப்புகழ் பெற்ற ஈழத்தின் முதுநிலை நடன ஆசிரியர் அமரர் லீலாம்பிகை செல்வராஜா அவர்களுடைய மறைவு உலகத்தமிழ் சமுதாயத்திற்கும் கலையுலகத்திற்கும் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து நிற்கும் அவருடைய குடும்பத்தினருக்கும், கலை உலகத்தினருக்கும் நெஞ்சு கனத்த இதயத்துடன் எமது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*International Institute of Tamil Arts*
*Postfach 6711, 8050 Zürich, Switzerland.*
*iita@hotmail.ch*
*0041779220314, 00414402056*

தகவல்:-நா.விஜயகுமார்
தேர்வுப்பொறுப்பாளர்,
அனைத்துலகத் தமிழ்க்கலை
நிறுவகம்-சுவிற்சர்லாந்து

(3653)

# சுதந்திரக் கட்சியை அசைக்க முடியாது

## இராஜாங்க அமைச்சர் ஸ்ரீயானி நம்பிக்கை



(காரைதீவு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைப்பது என்ன, அசைத்துப் பார்ப்பதுகூட எவராலும் முடியாத காரியமாகுமென்று, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஸ்ரீயானி விஜேவிக்கிரம தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காரைதீவு அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் மிகப் பெரிய கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுள்ளது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது கட்சி மகத்தான வெற்றியை ஈட்டியது.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர், அமைச்சர் பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்தான். அதற்காக அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுவிலகவேயில்லை.

"யார் வெளியில் போனாலும் இக்கட்சியில் இருப்பவர்கள் தொடர்ந்தும் இருப்பார்கள். அரசியல் என்பது இதுதான். கட்சி என்பதும் இதுதான். ஒருவர் விட்டு போகின்ற போது, அந்த இடத்தை நிரப்புவதற்கு இன்னும் அநேகர் இருக்கின்றனர்.

"நாம் இக்கட்சியுடனும், இக்கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் ஒன்றித்து நிற்கிறோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, எந்தவொரு தனி இனத்துக்கும் சொந்தமான கட்சி அல்ல. இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்து மக்களுக்கும் சேவை செய்கின்ற கட்சியாகும்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு, காரைதீவில் அலுவலகம் திறந்து வைக்கப்படுகின்ற இவ்வைபவம் ஒரு மகத்தான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

"கடந்த உள்ளூராட்சி தேர்தலில் காரைதீவு பிரதேச சபையில் எமது கட்சி இரு ஆசனங்களை வெற்றி பெற்றது. அத்துடன், எமது கட்சியைச் சேர்ந்தவரே, இப்பிரதேச சபையின் பிரதித் தவிசாளராக நியமனம் பெற்றுள்ளார்.

"இந்நிலையில்தான், எமது கட்சிக்கான காரைதீவு மக்களின் பேராதரவை வளர்த்தெடுப்பதுடன், அவர்களுக்கான எமது மக்கள் சேவைகளை வழங்குவதற்காகவுமாகவே, நாம் இவ்வலுவலகத்தைத் திறந்துள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொதுஜன முன்னணியின் அரசையே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனராம்

## குமார வெல்கம கூறுகிறார்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அரசாங்கத்தையே, மக்கள் தற்போது எதிர்பார்ப்பதாக ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தங்காலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய அரசாங்கத்தால் நீண்டகாலத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அரசாங்கத்தையே நாட்டு மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் நாட்டை அரைவாசிக்கும் மேல் அழிவுக்கு உட்படுத்திவிட்டது" என அவர் மேலும் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, ஆளும் கட்சிகளை விட அதிக ஆசனங்களை பெற்றுக்கொண்டதன் பின்னணியில் அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார். (இ-7)

# கூட்டு எதிர்க்கட்சி எம்.பி மகிந்தானந்த நேற்றுக்கைது



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நேற்றுக் காலை பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் முன்னிலையாகியிருந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2014 ஆம் ஆண்டு விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த காலத்தில் 53 மில்லியன் ரூபாய் அரசாங்க நிதியை முறைகேடாக பயன்படுத்தி கரம் மட்டும் சதுரங்க விளையாட்டு பலகைகளை கொள்வனவு செய்தமை தொடர்பில் வாக்குமூலம் வழங்கவே அவர் நேற்று நிதி மோசடி விசாரணை பிரிவில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புத்தாக்கம் செய்யும் நோக்கிலேயே நாடாளுமன்ற அமர்வு பிற்போடல்

## புதுக்கதையை அவிழ்த்துவிடுகிறார் அமரவீர



(கொழும்பு)

நாடாளுமன்றத்தை புத்தாக்கம் செய்யும் நோக்கிலேயே அடுத்த நாடாளுமன்ற அமர்வு பிற்போடப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வலஸ்முல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடத்தப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு தேசிய அரசாங்கம் புதிய திட்டங்களின் அடிப்படையில் செயற்படவுள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதேவேளை, தேசிய அரசாங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடும் பணிகள் உரிய ஆராய்வுகளின் பின்னர் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை நிலைகுலையச் செய்கின்ற எந்த ஒரு தீர்மானத்தையும் ஜனாதிபதியோ தாங்களோ மேற்கொள்ளப் போவதில்லையெனவும் மகிந்த அமரவீர இதன்போது தெரிவித்தார். (இ-7)

# சிறைச்சாலை அதிகாரிகள் இடமாற்றம்

(கொழும்பு)

சிறைச்சாலை அதிகாரிகள் சிலர் நேற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சேவைகளின் தேவை அடிப்படையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இரண்டு சிறைச்சாலை ஆணையாளர்கள் ஓய்வு பெற்றுச் சென்றமையினால் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இரண்டு சிரேஷ்ட மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் கூடுதலாக சிரேஷ்ட மற்றும் உதவி சிறைச்சாலை மேற்பார்வையாளர்கள் உள்ளடங்க 14 அதிகாரிகளுக்கு நேற்று முதல் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

வெலிக்கடை, மகசின், நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் தும்பறை சிறைச்சாலை அதிகாரிகள் குழுவிற்கு இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (இ-7)

# மட்டு.மாநகரசபை கன்னி அமர்வில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாநகரசபையின் கன்னி அமர்வில் தியாக தீபம் அன்னை பூபதிக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் வி.தவராஜாவின் வேண்டுகோளுக்கிணங்க சபையினரின் ஏகோபித்த சம்மதத்துடன், தியாக தீபம் அன்னை பூபதியின் 30 ஆவது ஆண்டு நினைவாக



3 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கடல் பாதுகாப்பு வேலைத்திட்டத்தில் இணைந்த இலங்கை

## பிரிட்டன் பிரதமர் தகவல்



(கொழும்பு)


கடலில் பிளாஸ்டிக் பொருட்கள் கொட்டப்படுவதால் ஏற்படும் சூழல் பாதிப்பை தடுக்கும் பிரித்தானியாவின் வேலைத் திட்டத்தில் இலங்கையும் இணைந்துள்ளது.

பிரித்தானிய பிரதமர் தெரேசா மே இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா, இலங்கை, நியூசிலாந்து மற்றும் கானா ஆகிய நான்கு நாடுகளும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

இதற்காக பிரித்தானிய அரசாங்கம், 61.4 மில்லியன் பவுண்டுகளை ஒதுக்குவதாகவும் அறிவித்துள்ளது.

இந்த நிதியின் ஊடாக சமுத்திரத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் கலப்பதை தடுப்பது குறித்த ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் சுத்தப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. (இ-7)



## ஈடன் கார்டன்ஸில் சிக்ஸர் மழை
# கொல்கத்தாவுக்கு 2ஆவது வெற்றி

டில்லி அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் ரசல், ராணா சிக்சர் மழை பொழிய, கொல்கத்தா அணி 71 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 2ஆவது வெற்றியைப் பெற்றது.

இந்தியாவில் 11ஆவது பருவகாலத்துக்கான ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது.

இதில் நேற்றைய தினம் நடந்த 13ஆவது லீக் போட்டி கொலகத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்தது.

கடந்த 7 ஆண்டுகள் கொல்கத்தா அணிக்கு தலைமை தாங்கிய கம்பீர், இம்முறை டில்லி அணிக்காக களமாடினார்.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

### ராணா அபாரம்

கொல்கத்தா அணிக்கு சுனில் நரைன் (1) கிறிஸ் லின் ஜோடி மோசமான ஆரம்பம் வழங்கியது.

உத்தப்பா (35), லின் (31) சற்று உதவினர். பின் வந்த ராணா, ரசல் சிக்சர் மழை பொழிந்தனர்.

ரசல் 12 பந்துகளில் 41 ஓட்டங்கள் (6 சிக்சர்) எடுத்தார். ராணா (59 ஓட்., 4 சிக்சர்), அரைச்சதம் அடிக்க, 20 ஓவர்களில் கொல்கத்தா அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களை எடுத்தது.

### நரைன் '100'

கடின இலக்கைத் விரட்டிய, டில்லி அணிக்கு எதுவுமே சரியாக அமையவில்லை.

ஜேசன் ரோய் (1), ஸ்ரேயாஸ் (4), கம்பீர் (8), ஒற்றை இலக்க ஓட்டங்கள் எடுத்தனர். பண்ட் (43), மக்ஸவெல் (47) என இருவரும் சற்று உதவினர். மோரிசை (2) போல்டாக்கிய நரைன், ஐ.பி.எல்., அரங்கில் 100 ஆவது விக்கெட்டை வீழ்த்தியதுடன், இந்த இலக்கை எட்டிய 3ஆவது வீரரானார்.

விஜய் ஷங்கர் (2), ஷமி (7) என, பின் வரிசையில் யாரும் நிலைக்கவில்லை. கடைசியில் போல்ட் (0) ஆட்டமிழக்க, டில்லி அணி 14.2 ஓவர்களில் 129 ஓட்டங்களுக்கு சுருண்டது. 71 ஓட்டங்களால் கொல்கத்தா அணி தனது இரண்டாவது வெற்றியை பதிவு செய்தது.

பந்துவீச்சில் கொல்கத்தா அணி சார்பில் சுனில் நரைன், குல்தீப் யாதவ் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தாவின் ராணா தெரிவானார்.




## விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட
பொமனேரியன் நாய்க்குட்டிகள்
விற்பனைக்கு உண்டு. (C-2267)

தொடர்பு: 077 436 6704





# மந்தனா 'நம்பர் - 4'



பெண்களுக்கான ஐ.சி.சி., ஒருநாள் போட்டித் தரவரிசையில் இந்திய வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா, 4ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீராங்கனைகளுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) டுபாயில் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா, 14ஆவது இடத்தில் இருந்து முதன்முறையாக 'நம்பர்-4' இடத்துக்கு முன்னேறினார். இவர் இந்த ஆண்டில் இதுவரை விளையாடிய 9 போட்டிகளில், ஒரு சதம், 5 அரைச்சதம் உட்பட 531 ஓட்டங்கள் குவித்துள்ளார். இந்திய அணித் தலைவர் மிதாலி ராஜ், 7ஆவது இடத்துக்கு முன்னேறினார். முதலிடத்தில் அவுஸ்திரேலியாவின் எலிஸ் பெர்ரி உள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய வேகப்பந்துவீச்சாளர் யூலன் கோஸ்வாமி, 5ஆவது இடத்துக்கு முன்னேறினார். முதலிடத்தில் அவுஸ்திரேலியாவின் ஜெஸ் ஜோனாசன் உள்ளார்.

சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில் இந்திய வீராங்கனை தீப்தி சர்மா, முதன்முறையாக 'நம்பர்-3' இடம்பிடித்தார்.

முதலிடத்தில் அவுஸ்திரேலியாவின் எலிஸ் பெர்ரி உள்ளார்.


வடமாகாணப் பரீட்சைகளுக்கான விசேட இறுதி கருத்தரங்குகள்

சாரதி தெரிவு
செவ்வாய்(இன்று) பிப 2.30 தொடக்கம் 5.30மணி வரை
வியாழன், வெள்ளி 10.00 தொடக்கம் 3.00 வரை

முன்பள்ளி ஆசிரியர் தெரிவு
செவ்வாய்(இன்று) பிப 1.00 மணி வியாழன், வெள்ளி, ஞாயிறு 9.00 தொடக்கம் 3.00 வரை

முகாமைத்துவ உதவியாளர்
செவ்வாய், வியாழன் பிப 2.30 தொடக்கம் 5.30 மணி

0766883394
D.M.I
(வெலிங்டன் சந்தி SDB வங்கி எதிரில் டானியல் கட்டட 2 ஆம் மாடி)



பருத்தித்துறையில்
## வேலைவாய்ப்பு

பருத்தித்துறையில் இயங்கும் கல்யாண மண்டபத்துடன் இணைந்த உணவகத்தில் பின்வரும் தொழிலுக்கான வேலைவாய்ப்பு வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உணவு பரிமாறுபவர்கள்
Food Suppliers

(C-2266)

கவர்ச்சிகரமான சம்பளமும் மேலதிக சலுகைகளும் வழங்கப்படும். விருப்பமுடையவர்கள் புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

தொடர்புகளுக்கு:- 077 704 6623, 077 315 1654, 021 226 5454


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 | 15 |
| 11 | 04 |
| 1943 | 2018 |

### திருமதி சகுந்தலாதேவி கோபாலபிள்ளை

*ஏழாலை தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி கோபாலபிள்ளை கடந்த 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இயற்கை எய்தினார்.*

*அன்னார் காலஞ்சென்ற கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - அன்னமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான கதிரேசு - தங்கம் தம்பதிகளின் மருமகளும் சசிகரன் (சுவிஸ்), சுதாகரன் (பிரான்ஸ்), ரூபாகரன் ஆகியோரின் தாயாரும் டீப்த்தி (சுவிஸ்), பாமினி (பிரான்ஸ்), நிலானி ஆகியோரின் மாமியும் பிருத்தியா, கார்த்திக், சுவாதிகா, மீரா, அஜய், ஜஸ்மி, ஹோகுல் ஆகியோரின் பேர்த்தியும் சறோஜினிதேவி, சாரதாதேவி ஆகியோரின் சகோதரியும் செந்தூரன், பிரபாலினி, வாமினி ஆகியோரின் பெரியம்மாவும் குருதேவ், ஶ்ரீவாமதேவன், காலஞ்சென்றவர்களான பாக்கியம், சுப்பிரமணியம், செல்லத்துரை, சிவக்கொழுந்து, துரைராசா, அன்னபூரணம், சண்முகராசா மற்றும் சின்னத்தங்கச்சி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்மை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(3655)

தகவல்:- கோ.ரூபாகரன் (மகன்)
021 224 1234


## யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை

### பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு *2018.05.12* ஆம் திகதி சனிக்கிழமை மு.ப *9.00* மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவிருப்பதால் இந் நிகழ்வில் பங்குபற்றும் பழைய மாணவர்கள் *2018.04.30* ஆம் திகதிக்கு முன்னதாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திரு.வி.கிருஷ்ணானந்தன்
021 224 1343

(3654)

தகவல்: அதிபர்
K.கெங்காதரமூர்த்தி
077 888 9393

# அட்ஷய திருதியை சிறப்பு மலர் 2018









# அட்சய திருதியை சிறப்பு மலர் 2018






















# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு கோப்பாய் மானம்புலம் வீகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகும். தொடர்ந்து 12 நாட்கள் உற்சவங்கள் இடம்பெறும். (இ)

# பெயர் மாற்றம்

கடற்கரை வீதி, சின்னத்தோட்டம், பருத்தித்துறை, அருளப்பு யோகராசா மறுநாமம் அருளப்பு அன்ரன் யோகராசா. தே.அ.அ.இல: 650984544V ஆகிய நான் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவது:

எனது சரியான பெயர் **அருளப்பு அன்ரன் யோகராசா** என்பதுடன் இன்று தொடக்கம் நான் சகல விடயங்களிலும் **அருளப்பு அன்ரன் யோகராசா** என்ற பெயரையே பயன்படுத்தி வருவேன் என்று இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

**உண்மையுள்ள**

**அருளப்பு அன்ரன் யோகராசா**

(8648)

# மேலாளர் / எக்கவுண்டன் தேவை

யாழில் இயங்கிவரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக செயற்படக் கூடிய கணனி அறிவுள்ள பெண் அல்லது ஓய்வு பெற்ற ஆண் ஒருவர் தேவை. பொறுப்பாக செயற்படக் கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**தொடர்பு: 077 771 0785**

# வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஸ் அன்ரனா மற்றும் கேபிள் TV உதிரிப் பாக விற்பனை நிலையத்திற்கு கீழ்க் காணும் வெற்றிடங்கள் உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும்.

Manager-40,000/- வரை
Bill Clark-25,000- வரை
Store Keeper-25,000/- வரை
Accountant-30,000/- வரை
உதவியாளர்கள்-20,000/- வரை
உதவி Technicians-25,000/- வரை

**தங்குமிடம் உணவு வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். 077 771 0785**

**Satstech Engineers Pvt (Ltd)**
**Colombo-13**

ஓம்
சிவமயம்

யாழ்ப்பாணம்

அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகப்பெருமான் தேவஸ்தானம்

# விளம்பி வருஷ மஹோற்சவப் பெருவிழா சிறப்பிதழ்-2018

முருகன் அடியார்களே!

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்த அல்லையம்பதியில் வேண்டுவார்க்கு வேண்டும் வரங்களை சொரியும் திருவருள் இனிச்ச புளியடி முருகப் பெருமானுக்கு விளம்பி வருஷம் சித்திரைத் திங்கள் 7ஆம் நாள் (20.04.2018)வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணிக்கு துவாஜரோகணம் (கொடியேற்றம்) ஆரம்பமாகி சித்திரா பௌர்ணமியன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெற முருகப்பெருமான் திருவருள் கைகூடியுள்ளது. எனவே மெய்யடியார்களே உற்சவகாலங்களில் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம் பெருமானின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

## கிரியாகால நிகழ்வுகள்

**19.04.2018** சித்திரைத் திங்கள் 06ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டு கர்மாரம்பம் அனுஞ்ஞை கிராமசாந்தி அஷ்டபலி, வாஸ்துசாந்தி, விபூதி பிரசாதம் வழங்கல்.

**20.04.2018** வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கும்பபூஜை, 9.30 மணிக்கு மூலவர் அபிஷேகம், 10.45 மணிக்கு வசந்த மண்டபபூஜை கொடிப்படி இருவீதிப் பிரதட்சணம், விநாயகர் பூஜை, தம்பபிரதிஷ்டை, கொடிப்பட அபிஷேகம், சமஷ்ததேவதாவபகன் . மூஷிக தாளம், மயூரதாளம் தானசீகர் 12.02 மணிக்கு தெய்வேந்திர சுபமுகூர்த்த வேளையில் துவாரோகணம் (கொடியேற்றம்) மகா ஆசீர்வாதம் நவசாந்தி ஆவாகணம் மாலை 4.00 மணிக்கு யாகாரம்பம்.

**25.04.2018** அன்று எம்பெருமானின் அழகிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெறும்.

**26.04.2018** வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு (மிருக உற்சவம்) வேட்டைத் திருவிழா நடைபெறும்.

**27.04.2018** வெள்ளிக்கிழமை மாலை சப்பறத்திருவிழா நடைபெறும்.

**28.04.2018** சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறும்.

**29.04.2018** ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு கும்பபூஜை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் 10.00 மணிக்கு தீர்த்த உற்சவமும் 11.30 மணிக்கு யாககும்பாபிஷேகம் விசேட பூஜை, விபூதி பிரசாதம் வழங்கல்.

**30.04.2018** திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு திருக்கல்யாணம், எம்பெருமான் திருவூஞ்சல் பூந்தண்டிகையில் எம்பெருமாள் திருவீதி உலா, விபூதி பிரசாதம் வழங்கல்.

**01.05.2018** செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு பிராஜசித்த அபிஷேகம் 7 மணிக்கு வைரவர் சுவாமிக்கு விசேடபூஜை, விபூதி பிரசாதம் வழங்கல்.



**அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகைதந்து எம்பெருமானின் பேரருளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.**

மஹோற்சவ பிரதமகுரு, கும்பாபிஷேக கிரியாமணி
**சிவஸ்ரீ இ.பாலகிருஸ்ண குருக்கள்**
பிரதமகுரு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் ,
திருக்கோவில் கொம்மாந்தரை.

ஆலய தர்மகர்த்தா செ.நடேசபிள்ளை
அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி
முருகன் தேவஸ்தானம்.

(சி/2248)


# இராசி பலன்

**மீனம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

**மேடம்:** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், வேலைச் சுமை கூடும், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்:** சுபகாரியச் செலவுகளில் நாட்டம் காட்டுவீர்கள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள் , பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம்.

**மிதுனம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும் , எதிர்பாராத வகையில் சில நன்மைகள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** மூத்த சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

| | | | |
|---|---|---|---|
| புத | சூரி.சந் சுக் | | |
| | **இராசி பலன்** | | ராகு |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அத்தம், சித்திரை | | |
| சனி. செவ் | | குரு | |

**17.04.2018**

சித்திரை 04, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
பிரதமை காலை 7.02 மணிவரை
துதியை பின்னிரவு 5.34 மணிவரை
பரணி பின்னிரவு 3.30 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
சித்திரைப் பரணி

**வளவன்**

**கடகம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம் , கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனை ஒன்றைக் கூறலாம், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** மறைமுக எதிர்ப்புகள் அகன்று, வியாபார விருத்தி ஏற்படலாம், புதிய முயற்சிகள் கைகூடும் சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைக்கும் நாள்.

**தனுசு:** உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், செய்தொழிலில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கன்னி:** சுவைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, வீண் விரயங்கள் ஏற்படலாம்.

# முல்லைத்தீவில் தமிழர்களின் வளங்கள், உரிமைகள் பறிபோகின்றன

## செல்வம். எம்.பி கவலை

(பனிக்கன்குளம்)

தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிடைக்குமாக இருந்தால் தமிழர்களின் நிலங்கள் மட்டுப்படுத்தப்பட்டு அது மத்திய அரசிற்கு உரித்தான நிலங்களாக மாகாண சபைக்கு நில அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றபோது அந்த நிலங்களை ஆள முடியாத நிலைக்குக் கொண்டு வருகின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதனை இந்த அரசுடன் பல தடவைகள் பேசியுள்ளோம். இது தொடர்பான செயற்பாடுகளை நாங்கள் இன்னும் துரிதப்படுத்த இருக்கின்றோம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான இவ்வாண்டுக்கான விளையாட்டு விழா நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தமட்டில் தமிழர்களின் வளங்கள் மட்டுமல்ல உரிமை சார்ந்த விடயங்களும் பறிபோகின்ற நிலைமை காணப்படுகின்றது. பல விடயங்களை நாடாளுமன்றில் பேசினாலும் கூட வனவளப்பாதுகாப்பு திணைக்களம் வடக்கில் தமிழ் மக்களின் காணிகளை அபகரிக்கின்ற செயற்பாட்டை செய்கின்ற அதேவேளையில் இப்பொழுது மகாவலி தண்ணீரைக் கொண்டு வருவதாக கூறி மகாவலித் திட்டத்தின் கீழ் காணிகளை அபகரிக்கின்ற செயற்பாடுகள் பறவைகள் சரணாலயம் என்று சொல்லி காணிகளை பறிக்கின்ற செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிடைக்குமாக இருந்தால் தமிழர்களின் நிலங்கள் மட்டுப்படுத்தப்பட்டு அது மத்திய அரசிற்கு உரித்தான நிலங்களாக மாகாண சபைக்கு நில அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றபோது அந்த நிலங்களை ஆள முடியாத நிலைக்குக் கொண்டு வருகின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதனை இந்த அரசுடன் பல தடவைகள் பேசியுள்ளோம். இது தொடர்பான செயற்பாடுகளை நாங்கள் இன்னும் துரிதப்படுத்த இருக்கின்றோம்.

அதேநேரத்தில் இளைஞர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி இளைஞர்கள் எல்லா வழிகளிலும் முன்னிற்கு வரவேண்டும் இளைஞர்களுக்கான நாடாளுமன்றத் தேர்தல் வருகின்றது. அதற்காக பதிந்து போட்டியிடுங்கள். தமிழ் இளைஞர். யுவதிகளின் செயற்பாடுகள் எல்லாம் எங்கள் தேசத்தில் எங்கள் மண் சார்ந்த விடயங்களாக பிரதேசத்தை முன்னிற்குக் கொண்டு வருகின்ற செயற்பாட்டைக் கொண்டு வந்து தேசத்தையும் மண் பற்றையும் விளையாட்டுகள் ஊடாக வெளிக்காட்ட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (2-281)

# வவுனியா நகரசபை தமிழர் விடுதலைக்கூட்டணி வசம்



(குருமன்காடு)

வவுனியா நகரசபை தமிழர் விடுதலைக்கூட்டணி தன்வசமாகியது. இதன் தலைவராக இ.கௌதமன் தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா நகரசபை பிதா உப-நகரபிதா தெரிவு நேற்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நகர சபைப் பிதாவுக்கான போட்டியில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் நா.சேனாதிராஜாவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் இராசலிங்கம் கௌதமனும் நிறுத்தப்பட்டு பகிரங்க வாக்களிப்பு இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட நா.சேனாதிராஜாவுக்கு (வயது-75) கூட்டமைப்பின் உறுப்பினர்களான 8 பேரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவருமாக 9 பேர் வாக்களித்திருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட இ.கௌதமன் (வயது-37) தமிழர் விடுதலைக் கூட்டணியின் 3 வாக்குகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 3 வாக்குகளும் ஐக்கிய தேசியக்கட்சியின் 3 வாக்குகளும், ஈ.பி.டி.பியின் ஒரு வாக்கும், பொதுஜன பெரமுனவின் ஒருவாக்குமாக 11 வாக்குகள் பெற்று நகர சபை பிதாவாக தெரிவு செய்யப்பட்டார்.

உப நகர பிதாவுக்கான தெரிவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் க. சந்திரகுலசிங்கமும் சுதந்திரக் கட்சியின் சார்பில் சு. குமாரசாமியும் போட்டியிட்டிருந்தனர்.

இவர்களில் க.சந்திரகுலசிங்கத்திற்கு கூட்டமைப்பின் உறுப்பினர்களான 8 பேரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவருமாக 9 பேர் வாக்களித்திருந்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சு.குமாரசாமிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் 3 வாக்குகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 3 வாக்குகளும் ஐக்கிய தேசியக்கட்சியின் 3 வாக்குகளும் ஈ.பி.டி.பியின் ஒரு வாக்கும் பொதுஜன பெரமுனவின் ஒரு வாக்குமாக 11 வாக்குகள்பெற்று உப நகர பிதாவாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந் நிலையில் அனைத்து தெரிவுகளுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடுநிலைவகித்திருந்தது.

இத் தெரிவுக்கு பார்வையாளர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன். கே.கே.மஸ்தான், சிவமோகன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# சட்டவிரோத கடற்றொழில் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குக!

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்படுவதாகவும் இதற்கு ஓர் நிரந்தரமான தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்ட படகுகள் சட்டவிரோதத் தொழில்களில் ஈடுபட்டு வருவதுடன், உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி கரை வலையிழுத்தல் மற்றும் தடை செய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்து வருவதனால் தமது தொழில் முழுமையாகப் பாதிக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மீனவர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த பெப்ரவரி மாதம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர். வடமாகாண விவசாய அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சர், மாகாண சபை உறுப்பினர் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து இவ்வாறு சட்டவிரோதத் தொழில்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக, செம்மலை கிழக்கு. நாயாறு. வெலிஓயா போன்ற பகுதிகளிலும் அதிகளவான சட்டவிரோத தொழில்கள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி கரை வலைத்தொழில்கள் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான சட்டவிரோத தொழில்களால் தமது தொழில் நடவடிக்கைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கடற்றொழிலை நம்பி முதலீடு செய்த தொழிலாளர்கள் அதற்கான பலாபலனைப் பெற்றுக் கொள்ள முடியாதும் கடன்களைச் செலுத்த முடியாதும் செல்கின்ற நிலைமையே காணப்படுகின்றது. இதற்கு நிரந்தரமான ஓர் தீர்வைப்பெற்றுக் கொள்ள அனைத்துத் தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன. (2-315)

# உதவிப் பொருட்கள் வழங்கி வைப்பு

(மல்லாவி)

நோர்வே நாட்டில் வாழும் புலம்பெயர் தமிழ் உறவின் குடும்பத்தினரின் 57 ஆயிரம் ரூபா நிதி அனுசரணையுடனும் வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டிலும் வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின்போது முல்லைத்தீவு. கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெற்றோரை இழந்த மற்றும் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், பிள்ளைகளினால் கைவிடப்பட்ட வயோதிபத் தாய் ஒருவருக்கும் உதவிப் பொருட்கள் வழங்கி வைக் கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு சித்திரைப் புத்தாண்டு அன்று மல்லாவி நகரப் பகுதியில் உள்ள சிவன் ஆலயத்தில் வைத்து ஆலய பரிபாலன சபையின் செயலாளர் எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. (2-15)

# வவுனியா புகையிரத நிலைய மேம்பாலத்தின் வாசகம் சிங்கள மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது



(மல்லாவி)

வவுனியா புகையிரத நிலையத்தின் மேம்பாலத்தில் "வவுனியா புகையிரத நிலையத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்" என்ற வாசகம் சிங்கள மொழியை மட்டும் முதன்மைப்படுத்தி எழுதப்பட்டுள்ளதுடன் ஏனைய தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மிக சிறிய அளவில் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா மாவட்டமானது 90 வீதமான தமிழ் மக்களையும் மற்றும் ஏனைய சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும் 10 வீதத்தை கொண்டுள்ள நிலையில் மும்மொழிக் கொள்கைக்கு அமைவாக பெரும்பான்மை மக்கள் கூடுதலாக வாழும் பிரதேசங்களில் அந்த மக்களின் தாய் மொழி மென்மையாகவும், ஏனைய மொழிகள் அடுத்ததாகவும் சம அளவில் பொறிக்கப்பட வேண்டும்.

இந் நிலையில். வவுனியா புகையிரத நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள புகையிரத மேம்பாலத்தில் பொறிக்கப்பட்டுள்ள வாசகத்தில் சிங்கள மொழியில் மட்டும் பெரிய எழுத்துக்களிலும் மற்றும் தமிழ். ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறிய எழுத்துக்களாலும் எழுதப்பட்டுள்ளமை பல்வேறு தரப்பினர் மத்தியிலும் கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் நல்லிணக்கத்திற்கு எப்படி வழிசமைக்கும் என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டி கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை மாற்றியமைப்பதுடன், இனிவரும் காலங்களில் இப்படியான நிலை ஏற்பட்டாது இருப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளையும் சேர்ந்த அதிகாரிகள் விழிப்புணர்வுடன் இருந்து இன நல்லிணக்கத்திற்கு ஒத்துழைப்பு செய்ய வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். (2-15)

# புதுவருட தினத்தை முன்னிட்டு சிறார்களுக்கு பரிசுப் பொருட்கள்

(பனிக்கன்குளம்)

புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வின் போது பச்சிலைப் பள்ளி கிளாலியில் அமைந்துள்ள முன்பள்ளி சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கி மகிழ்வித்தனர் சார்ப் நிறுவனத்தினர்.

சார்ப் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் திட்டமிடல் முகாமை யாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் தலைமையில் அண் மையில் பச்சிலைப்பள்ளி பகுதியில் அமைந்திருக்கும் சார்ப் நிறுவனத்தின் அலுவல கத்தில் புதுவருட தினத்தை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பரிசுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் சக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள். சார்ப் நிறுவன த்தின் தலைமை அலுவலகத்தின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (2-281)

# செட்டிகுளம் பிரதேச சபை சுதந்திரக்கட்சி வசம்

(குருமன்காடு)

தமிழரசுக்கட்சி பெரும்பான்மை பெற்ற செட்டிகுளம் பிரதேச சபையில் சுதந்திரக் கட்சி ஆட்சியமைத்துள்ளது.

தலைவர். உப தலைவர் தெரிவு நேற்று பிற்பகல் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இடம் பெற்றது.

தவிசாளர் பதவிக்காக 3 பேர் போட்டியிட்டமையால் வாக்கெடுப்பிற்கு சென்றது.

உறுப்பினர்களின் விருப்பத்திற்கு அமைவாக பகிரங்க வாக்கெடுப்பு இடம்பெற்றது.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஆசிர்வாதம் அந்தோணி 7 வாக்குகளையும், தமிழ்க்கூட்டமைப்பைச் சேர்ந்த சு.ஜெகதீஸ்வரன் 5 வாக்குகளையும், தமிழர் விடுதலை கூட்டணியின் யேசுதாஸ் டெல்சன் 3 வாக்குகளையும் பெற்ற நிலையில் குறைந்த வாக்குகள் பெற்ற டெல்சன் நீக்கப்பட்டு ஏனைய இருவருக்கும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த 4 பேரும் ஐக்கிய தேசியக் கட்சியின் 2 பேரும் பொதுஜன பெரமுனவின் சார்பில் ஒருவரும் ஆசிர்வாதம் அந்தோணிக்கும் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட ஜெகதீஸ்வரனுக்கும் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரும் வாக்களித்தனர். இதனால் ஆசிர்வாதம் அந்தோணி தவிசாளராகத் தெரிவு செய்யபட்டார்.

இதேவேளை உப தலைவருக்கான போட்டியில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நவரட்ணம் சிவாயினியும், கூட்டமைப்பு சார்பில் சி.அருள்கரனும் போட்டியிட்டனர்.

இதில் சிவாயினி 7 வாக்குகளும், அருள்கரன் 6 வாக்குகளும் பெற்றிருந்த நிலையில் ந.சிவாயினி உப தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை தலைவர் மற்றும் உப தலைவருக்கான தெரிவில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த உறுப்பினர் நடுநிலை வகித்திருந்ததுடன். தமிழர் விடுதலை கூட்டணியினர் தலைவர் தெரிவின் போது இரண்டாம் சுற்றிலும் உபதலைவருக்கான தெரிவிலும் நடுநிலை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட இருவர் நேற்றைய சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை. (2-250)

# கள்ளியடி கடற்கரைப் பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருட்கள் மீட்பு

## பேசாலை காட்டில் செயலிழப்பு

(மல்லாவி)

மன்னார் பேசாலைப் பொலிஸ் நிலையப் பிரிவிற் குட்பட்ட கள்ளியடி கடற்கரைப் பகுதியில் மீனவர்கள் தங்குவதற்கு வாடிவீடு அமைப்பதற்காக மண்ணைத் தோண்டிய போது இரும்பு பெட்டி ஒன்று தென்பட்டதையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் அதிரடிப் படையினரின் உதவியுடன் ஒரு தொகுதி வெடி பொருட்களை மீட்டு பின்னர் அதனை செயலிழக்கச் செய்துள்ளதாக பேசாலைப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வேளை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வங்காலையில் இருந்து கள்ளியடி கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் பேசாலை கள்ளியடி கடற்கரைப் பகுதியில் வாடி வீடு அமைப்பதற்காக மண்ணில் கிடங்கு தோண்டும் போது இரும்பு பெட்டி ஒன்றை கண்டு விட்டு உடனடியாக பேசாலைப் பொலிஸாருக்கும் அருகே இருந்த கடற்படைத் தளத்திற்கும் தகவலை வழங்கியுள்ளனர்.





இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பேசாலைப் பொலிஸார் குறித்த இடத்தைச் சுற்றி பாதுகாப்பு வழங்கியதுடன் மன்னார் மாவட்ட நீதிபதியின் கவனத்திற்கு சம்பவத்தை கொண்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் விசேட அதிரடிப் படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் வீரர்களின் உதவியுடன் மண்ணை அகழ்வு செய்து இரும்பு பெட்டியை மீட்டு திறந்த போது, அதில் 81 ரக மோட்டாருக்குப் பயன்படுத்தும் ஏவுகணை குண்டுகள் - 15 மற்றும் 61 ரக ஏவுகணையின் குண்டு ஒன்றுமாக மொத்தம் 16 குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் குண்டுகள் பேசாலை பொலிஸ் நிலையப் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் வைத்து செயலிழக்கச் செய்யப் பட்டுள்ளதாக பேசாலைப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# நாய்க்கடிக்கு இலக்காகுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகள், பொது வைத்தியசாலை வளாகம், கிளிநொச்சி நகரம் ஆகிய இடங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக்காணப்படுவதுடன் நாய்க்கடிக்கு இலக்காகுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள், பொது இடங்கள், பொது வைத்தியசாலை வளாகம் ஆகியவற்றில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகளவில் காணப்படுகின்றது.

இவ்வாறு நாய்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் நாய்க்கடிக்கு இலக்காகுவோர்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுவதுடன், விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

பாடசாலைகளில் மதிய உணவு வழங்கப்படுவதனால் மீதியான உணவுகளை மாணவர்கள் கொட்டுவதனால் பாடசாலைகளில் அதிகளவான தெருநாய்கள் ஒன்று சேருகின்றன.

இக்கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச்சங்க நிர்வாகம் மற்றும் மாவட்ட பொது அமைப்புக்கள் கோரியுள்ளன.

கடந்த 2016 ஆம் ஆண்டிலே ஐயாயிரத்து 633 பேரும், 2017 ஆம் அண்டில் பதினொராயிரத்து 800 பேரும், இவ்வாண்டில் கடந்த இரு மாதங்களில் 789 பேரும், இவ்வாறு நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேற்படி நாய்க்கடிக்கு உள்ளாகுவோர் வருடாந்தம் அதிகரித்து வருகின்றமையும் மேற்படி அமைப்புக்கள் சுட்டிக் காட்டி வருகின்றன. (2-315)

# நூற்றுக்கு மேற்பட்ட நீர்ப்பாசனக்குளங்கள் முல்லை.மாவட்டத்தில் புனரமைக்க வேண்டும்

## விவசாய அமைப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படுகின்ற நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், பாரிய நீர்ப்பாசனக்குளங்கள் என்பவற்றைப் புனரமைக்க வேண்டிய தேவை காணப்படுவதாகவும் இவற்றைப்புனரமைத்துத்தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 228 இற்கும் மேற்பட்ட சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் காணப்படுகின்றன.




இந்தக் குளங்களில் கடந்த ஆண்டில் 53 குளங்கள் 98.57 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

அதாவது, கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 15 குளங்களும், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 7 குளங்களும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 15குளங்களும், துணுக்காய் பிரதேசத்தில் 6 குளங்களும், மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 8 குளங்களும், வெலிஓயா பிரதேசத்தில் 2 குளங்களுமாக மொத்தம் 53 குளங்கள், புனரமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்த காலத்தில் செய்கை பண்ணப்படாது கைவிடப்பட்ட விவசாய நிலங்களும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் அதிகளவில் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுகின்ற குளங்களைப் புனரமைத்து விவசாய நிலங்களை பகிர்ந்தளிக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றபோதும், சில குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் கீழுள்ள விவசாய நிலங்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு வனவளத்திணைக்களம் தடையாக இருப்பதாகவும் இவற்றை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளன.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படுகின்ற பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் பல குளங்கள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளதுடன், நீர் விநியோக வாய்க்காலும் புனரமைக்க வேண்டியுள்ளது.

இதேவேளை கடந்த காலங்களில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட சிறிய குளங்களின் பகுதிவேலைகளும் பல குளங்கள் முழுமையாகவும் புனரமைக்க வேண்டியிருப்பதாகவும் அவற்றைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் மாவட்ட விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (2-315)

# அரசியல் சூழல் போராட்டம் நடத்தும் மக்களுக்கு பாதகமாக அமைந்துள்ளது

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் புவனேஸ்வரன் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழல் போராட்டம் நடத்தும் மக்களுக்கு பாதகமாக அமைந்துள்ளது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எமது பூர்வீக வாழ்விடநியாயப் போராட்டத்தின் முடிவு என்ன என்ற கேள்வியோடு அரசியல் பிரமுகர்களுக்கு கேப்பாப்பிலவு மக்கள் நேற்று முன்தினம் மகஜர்கள் கையளித்தனர். இந்நிலையில் மக்களிடம் மகஜர்களைப் பெற்றுக்கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 26 ஆம் திகதி வடமாகாணசபை அமர்வு கூடுகின்ற போது அத்தலைவருடன் பேசி கேப்பாப்பிலவு மக்களின் மணமீட்பு போராட்டத்தை மீண்டும் ஒரு போராட்டம் ஊடாக கொண்டு வருவதற்கு எண்ணியுள்ளேன்.

இந்த மக்களின் போராட்டம் இன்று வரை முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மக்கள் பிரதிநிதிகள் பல்வேறு முயற்சிகள் எடுத்து அதன் ஒருபகுதி காணி விடுவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் நீண்ட இடைவெளி ஒன்று ஏற்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சூழல் போராட்டம் நடத்தும் இந்த மக்களுக்கு பாதகமாக அமைந்துள்ளது பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் விரைவில் பேசி மக்களுக்கான தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என மாகாண சபை உறுப்பினர்கள் என்ற வகையில் நாங்கள் மாகாண சபையில் ஒரு தீர்மானமாக கொண்டு வந்து மீண்டும் பாதுகாப்பு அமைச்சிடம் குறித்த காணிகளை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்க எண்ணியுள்ளேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# இரணைமடுகுளத்தின் கீழான சிறுபோக நெல் விதைப்பு இவ்வார இறுதியில் நிறைவு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக் குளத் தின் கீழ் இவ்வாண்டு ஆயிரத்து 812 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்வதற்கும் 300 ஏக்கர் சிறுதானியச்செய்கை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்ட நிலையில் அதன்படி திகதிகள் தீர்மானிக்கப்பட்டும் காணிகளை விவசாய அமைப்புக்கள் பகிர்ந்தளிப்பதிலும் இரணைமடுக்குளத்தின் நீர் விநியோகத்திலும் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக திட்டமிட்டபடி குறித்த திகதிகளில் விதைப்புக்களை மேற்கொள்ளமுடியாத போதும், தற்போது விவசாயிகள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சிறுபோக கூட்டத்தீர்மானத்தின் படி கூடுதலான விவசாயிகள் சேறடித்து விதைக்கின்ற முறையையே பின்பற்றி பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது 19 வீதமான விதைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் இவ்வார இறுதிக்குள் சிறுபோக நெல் விதைப்பு முழுமையடையக்கூடிய வகையில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# விளம்பி வருட இராசி பலன்கள்

## 14.04.2018-13.04.2019

## விழிப்புணர்ச்சி தேவை!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



விளம்பி வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில், லாபாதிபதி செவ்வாயுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். செவ்வாய் நான்காமிடத்திற்கும் அதிபதியாவார். 10ஆம் இடத்தில் குரு வக்ரம் பெற்றிருக்கிறார். ஜென்மத்தில் கேதுவும், 7இல் ராகுவும் இருப்பது சர்ப்ப தோஷ அமைப்பாகும். மூன்றாம் இடத்தில் புதனும், சந்திரனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். சுக ஸ்தானத்தில் சூரியன், சுக்ரனுடன் இணைந்திருக்கிறார். 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் அஷ்டமாதிபதியான சூரியனுடன் இணைந்திருப்பது அவ்வளவு நல்லதல்ல.

இப்படிப்பட்ட கிரக அமைப்புடன் இந்த ஆண்டு தொடங்குகிறது என்றாலும், இந்த கிரக அமைப்பை, உங்கள் சுய ஜாதகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து அதற்கான பலன்களை அறிந்து பரிகாரங்களைச் செய்வது நன்மைகளை வழங்கும்.

வருடத்தின் தொடக்க நாள் சனிக்கிழமையாக இருக்கிறது. சனி உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், தனாதிபதியாகவும் விளங்குவதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். சுய ஜாதகத்தைப் புரட்டிப் பாருங்கள். திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளையும், குலதெய்வ வழிபாடுகளையும், சர்ப்ப சாந்திப் பரிகாரத்தையும் யோகபலம் பெற்ற நாளில் செய்து வருவது நல்லது.

**குரு பார்வை பலன்!**

ஆண்டின் தொடக்கத்தில் குரு பகவான் உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் சஞ்சரித்து 2, 4, 6 ஆகிய மூன்று முத்தான இடங்களைப் பார்க்கிறார். அந்த இடங்கள் புனிதமடைந்து அற்புதமான பலன்களை உங்களுக்கு அள்ளி வழங்கப் போகின்றது. குரு பார்ப்பதால் எண்ணங்கள் எளிதில் நிறைவேற வழிபிறக்கும். இருப்பினும் ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். குறை கூறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அரைகுறையாகப் பல பணிகள் பாதியிலேயே நின்றுவிடலாம். உங்கள் இராசியைப் பொறுத்தவரை குரு பகவான் 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். வெற்றிகள் ஸ்தானம் அவருக்கு சொந்தம். விரய ஸ்தானமும் அவருக்கு சொந்தம். எனவே விரயங்களிலிருந்து விடுபட குருபகவான் கவசம் பாடி குருவை வழிபாடு செய்யலாம்.

குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கையும் உண்டு. தைரியமாக சில முடிவுகளை எடுத்துக் காரிய வெற்றி காண்பீர்கள். வி.ஐ.பி.க்களின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைக்கும்.

குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவது நன்மை தான். தாய், வாகனம், வீடு, ஆரோக்கியம், கல்வி போன்றவற்றைக் குறிக்கும் இந்த இடத்தை குரு பார்ப்பதால், தாய்வழி ஆதரவு, இடம், பூமி சேர்க்கை, கல்வி வளர்ச்சி, வாகன யோகம், சொத்து சேர்க்கை, சொந்தங்களின் பாராட்டு அனைத்தும் கிடைக்கும்.

குருவின் பார்வை 6ஆம் இடத்தில் பதிவதால் வேலை கிடைக்காதவர்களுக்கு வேலை கிடைக்கும். விரும்பிய காரியத்தை விரும்பியபடி செய்து முடிப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லாது. பணிகளில் இருந்த தொய்வு அகலும். சம்பளப் பாக்கிகள் தானாக வந்து சேரும். உயரதிகாரிகள் உங்கள் திறமையைக் கண்டு பாராட்டுவர். சுபகாரியப் பேச்சுகள் முடிவாகலாம். வெளிநாட்டு முயற்சி கைகூடலாம். இக்காலத்தில் திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டு வருவதுடன் ராகு-கேதுகளுக்குப் பிரீதி செய்வதன் மூலமும் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**செவ்வாய்-சனி சேர்க்கையும், பார்வையும்!**

14.4.2018 முதல் 29.4.2018 வரை தனுசு இராசியில் செவ்வாய்- சனி சேர்க்கை ஏற்படுகிறது. அதன் பிறகு 20.3. 2019 முதல் 13.4.2019 வரை செவ்வாய், சனியைப் பார்க்கும் அமைப்பு உள்ளது. இதுபோன்ற காலங்களில் கூடுதல் கவனம் தேவை. செவ்வாய் உங்கள் இராசிக்கு சுக லாபாதிபதியாவார். அவர் உங்கள் இராசிநாதன் மற்றும் தனாதிபதியாக விளங்கும் சனியோடு சேருவதால் நல்ல பலன்கள் கொடுக்க வேண்டும் என்றாலும், இரண்டு முரண்பாடான கிரகங்களின் சேர்க்கை என்பதால் வீண் விரயங்களில் இருந்து விடுபட சுபவிரயங்களை மேற்கொள்வது நல்லது.

**விருச்சிகத்தில் குரு!**

விளம்பி வருட புரட்டாசி மாதம் 18ஆம் திகதி (4.10.2018) வியாழக்கிழமை அன்று, விருச்சிக இராசிக்கு குரு பகவான் பெயர்ச்சியாகிறார். விருச்சிகத்திற்கு குரு வருவது நன்மை தான். சகாய விரய ஸ்தானாதிபதியாக விளங்கும் குரு பகவான், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது விரயத்திற்கேற்ற இலாபம் உங்கள் கரங்களில் புரளும். வீடு மாற்றம் மட்டுமல்ல, நாடுமாற்றம் வந்தால் உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. காரணம் ஜென்ம கேதுவின் ஆதிக்கம் தான். இருப்பினும் குரு லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை பதியும் இடங்கள் அனைத்தும் புனிதமடையும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது லாப குருவால் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

11ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், உங்கள் இராசிக்கு 3,5,7 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். 3ஆம் இடத்தைக்குரு பார்ப்பதால் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். சகோதரர்கள் பாசத்தோடு பழகுவர். கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும்.

5ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். பூர்வீக சொத்துத் தகராறு அகலும். புதிய பாதை புலப்படும். பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். பல வருடங்களாகச் சம்பளம் குறைவாக வாங்குகின்றோமே என்று கவலைப்பட்டவர்கள் பதவி உயர்வு கிடைத்து மகிழ்ச்சியடைவர். பிள்ளைகளுக்கும் வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் பெருகும். தங்கம், வெள்ளி மற்றும் விலைஉயர்ந்த பொருட்களை வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். மங்கல காரியங்கள் மனையில் நடைபெறும்.

குருவின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால் வரன்கள் வாசல் தேடிவரும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். நாணயமும், நம்பிக்கையும் கொண்ட நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். வருமானம் திருப்திகரமாக இருக்கும். பாதியில் விட்ட கல்வியை மீண்டும் தொடரும் வாய்ப்பு உண்டு. நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.




**ராகு-கேது பெயர்ச்சி!**

13.2.2019இல் மிதுன இராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். அதன்படி உங்கள் இராசிக்கு 12இல் கேதுவும், 6இல் ராகுவும் வருகிறார்கள். இதன் விளைவாக சில நல்ல மாற்றங்களும், உங்களுக்கு வந்து சேரும். 'கருநாகம் 6இல் வந்தால் கடும்பகையும், நோயும் தீரும்' வருமானம் திருப்தியாகி வசந்தமும் வந்து சேரும்' என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. எனவே உயர்ந்த மனிதர்களின் சந்திப்பால் வருங்காலத்தை நலமாக்கிக் கொள்வீர்கள். ஆரோக்கியத் தொல்லை அகலும். பயணங்களால் பலன் கிடைக்கும். நாக தோஷத்தின் ஆதிக்கத்தில் இருந்த உங்களுக்கு இப்பொழுது நல்லநேரம் வந்துவிட்டது.

கேதுவின் ஆதிக்கத்தால் ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். முன்னோர் கட்டிய கோவில் திருப்பணிகளை முறையாகச் செய்ய முன்வருவீர்கள். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். இக்காலத்தில் ராகு-கேதுகளுக்குரிய சிறப்பு வழிபாடுகளை அனுகூல ஸ்தலங்களில் செய்வது நல்லது.

**வளர்ச்சிக்குரிய வழிபாடு!**

'ஓம் நமோ நாராயணாய நமஹ' என்று 9 முறை தினமும் உச்சரியுங்கள். உங்களுக்குரிய யோக எண் அடிப்படையில் தினமும் எழுதி வாருங்கள். காரைக்குடி அருகிலுள்ள அரியக்குடி திருவேங்கடமுடையானையும், அலர்மேலுமங்கைத் தாயாரையும் வழிபட்டு செல்வநிலை உயர வழிவகுத்துக் கொள்ளுங்கள்.

**குரு மற்றும் சனி வக்ர காலங்கள்!**

குருவின் வக்ர காலத்தில் திடீர் பயணங்கள் அதிகரிக்கும். உடன் பிறப்புகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். பக்கத்தில் இருப்பவர்கள் பகையாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வெளிநாட்டில் பணிபுரிந்தவர்கள் திடீரென சொந்த ஊர் திரும்பும் சூழ்நிலை உருவாகும்.

சனியின் வக்ர காலத்தில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். மருத்துவச் செலவால் விரயங்கள் கூடும். தொட்ட காரியங்களில் தடைகளும், தாமதங்களும் வந்து கொண்டேயிருக்கும். இந்த காலத்தில் திசைமாறிய தென்முகக் கடவுளான தட்சிணாமூர்த்தியையும், சூரியபகவானுக்கு அருகில் இருந்து அருள்வழங்கும் சனி பகவானும் வீற்றிருக்கும் ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டால் செல்வ நிலை உயரும்.

**மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

விளம்பி வருடத்தில் உங்களுக்கு விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். இனம்புரியாத கவலை மேலோங்கும். இனிமையாகப் பேசியவர்கள் பகையாளியாக மாறுவார்கள். பகையான நட்புகள் உறவாகலாம். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும். சகோதர சச்சரவுகளைச் சாமர்த்தியமாக விலக்குவது நல்லது. தாய்வழி ஆதரவு திருப்தி தரும். செவ்வாய்-சனி சேர்க்கை காலத்தில் விழிப்புணர்ச்சி அதிகம் தேவை.

ராகு-கேது பெயர்ச்சிக்குப் பின்னால் எதிர்பாராத இடமாற்றங்கள் கிடைக்கலாம். சலுகைகளும் வந்து சந்தோசப்படுத்தும். குலதெய்வ வழிபாடுகளை முறையாக மேற்கொள்ளுங்கள். ராகு-கேது பெயர்ச்சிக்கு முன்னதாகவே நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. வழிபாட்டின் மூலமே வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளலாம். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம், இலாகா மாற்றங்கள் உண்டு. சகப் பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வாகனம் வாங்க, வீடுகட்ட எடுத்த முயற்சி வெற்றி தரும்.

(தொடரும்)

## காயப்பட்ட மனங்களை ஒரு இரவுக்குள் ஆற்றுப்படுத்த முடியாது

# தமிழ்-சிங்கள மக்களை யுத்தம் பிரித்து விட்டது

## யாழ்.கட்டளைத் தளபதி கவலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம், வாழ்க்கைத் தரம், தொழில்துறை மேம்பாடு ஆகியவற்றைக் கட்டி எழுப்பி கொடுக்கின்ற மகத்தான பணிகளில் இராணுவத்தின் யாழ்.மாவட்ட கட்டளைத் தலைமையகம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் ஈடுபடும் என்று இராணுவத்தின் யாழ்.மாவட்ட கட்டளைதளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தமிழ் - சிங்கள சித்திரை புத்தாண்டை முன்னிட்டு 683 ஏக்கர் காணியை விடுவித்து கொடுத்த பிற்பாடு விடுத்த செய்தி குறிப்பிலேயே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

30 வருட கால கசப்பான யுத்தத்துக்கு முன்னர் இந்நாட்டில் தமிழ், சிங்கள மக்கள் ஒரு தாய் மக்களாக வாழ்ந்துள்ளனர். இனத்தால் வேறுபட்டவர்களாக சித்திரிக்கப்பட்டு வருகின்ற போதிலும் மொழி, சமயம், கலாசாரம், பண்பாடு, விருந்தோம்பல், பாரம்பரியம், நாகரிகம் என்று வாழ்க்கை முறைமையின் ஒவ்வொரு அம்சத்திலும் இரு தரப்பினருக்கும் இடையில் ஒன்றுபட்ட தன்மைகள் நின்று நிலவி விரவி காணப்படுகின்றன.

இதன் அடையாளமாகவே தமிழ் - சிங்கள புத்தாண்டு இரு இன மக்களாலும் காலம் காலமாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

துரதிர்ஷ்டவசமாக பிரிவினைவாதம், யுத்தம் ஆகியன தமிழ், சிங்கள மக்களை பிரித்து விட்டபோதிலும் யுத்தத்துக்கு பிந்திய அமைதிச் சூழல் மீண்டும் இரு இனங்களும் ஐக்கியம், சமாதானம், சகோதரத்துவம், சாந்தி, சகிப்புத் தன்மை, புரிந்துணர்வு ஆகியவற்றுடன் வாழக்கூடிய இயல்பு நிலைமையை மீண்டும் ஏற்படுத்தித் தந்துள்ளது.

இவ்வாறான ஒரு மகிழ்ச்சியான தருணத்தில் யாழ். மாவட்ட மக்களுடன் சேர்ந்து தமிழ் - சிங்கள சித்திரை புத்தாண்டைக் கொண்டாடுவதில் நாமும் பேருவகை அடைகின்றோம்.

யுத்தமற்ற இன்றைய அமைதிச் சூழலில் யாழ்ப்பாண மாவட்ட மக்களின் மனங்களை வெற்றி கொள்கின்ற இலட்சியத்தை நோக்கி இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகம் பற்றுறுதியுடன் செயற்பட்டு வருகின்றது. யுத்தத்தாலும், யுத்தத்தின் எச்சத்தாலும் காயப்பட்டு இருக்கின்ற மக்களின் மனங்களை ஒரு இரவுக்குள் ஆற்றுப்படுத்த முடியாது என்பதை நாம் அறிவோம்.

ஆகவேதான் தூரநோக்கு, தீர்க்கதரிசனம், இதய சுத்தி ஆகியவற்றுடன் யாழ். மாவட்ட மக்களுக்கான எமது சேவைகளை தொடர்ந்தேச்சையாக மேற்கொண்டு வருவதுடன் தேசிய பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாத வகையில் மக்களின் உணர்வுகள் சம்பந்தப்பட்ட விடயங்களை கையாண்டும் வருகின்றோம்.


அவ்வகையில் தான் இச் சித்திரைப் புத்தாண்டு பரிசாக பெருந்தொகை நிலத்தை மக்களுக்கு விடுவித்து தந்து உள்ளோம்.

மீண்டும் ஒரு யுத்தம் வரக்கூடாது என்று எல்லோரையும் போலவே நாமும் பெரு விருப்பம் கொண்டிருக்கின்றோம். அதற்காகவே எமது உடல், உழைப்பு, உயிர் ஆகியவற்றை அர்ப்பணித்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

எனவே மீண்டும் ஒரு யுத்தம் வேண்டாம் என்கிற முக்கியத்துவம் வாய்ந்த செய்தியை உங்கள் உறவுகளுக்கு குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு கற்பித்து கொடுத்து அவர்களை நாட்டுக்கும், வீட்டுக்கும் பயன் கொடுக்கின்ற நற்பிரஜைகளாக வளர்த்தெடுங்கள் என்று இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி என்கிற விதத்தில் இத்தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

தமிழ் - சிங்கள இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை நிலைநாட்டுகின்ற உறவுப் பாலமாக இராணுவத்தின் யாழ்.மாவட்ட கட்டளைத் தலைமையகம் செயற்படும் என்பதையும் இத்தால் கூறி வைக்கின்றேன்.

அத்துடன் எமது மக்கள் சேவைகளுக்கு உதவி, ஒத்தாசை வழங்குகின்ற அனைத்து தரப்பினர்களுக்கும் எனது நன்றி அறிதல்களை இத் தருணத்தில் தெரிவிக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)





திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் 15ஆம் திகதி காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 15 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை தங்கரதமும் 24 ஆம் திகதி மாலை திருமஞ்சத் திருவிழாவும் 25 ஆம் திகதி மாலை திருக்கைலாய வாகனமும், 27 ஆம் திகதி சப்பற திருவிழாவும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும் 2ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. மஹோற்சவ காலங்களில் வசந்த மண்டபூஜை முற்பகல் 10 மணிக்கும் மாலை 06.15 மணிக்கும் நடைபெறும். தேர் மற்றும் தீர்த்தத் திருவிழா அன்று காலை 7 மணிக்கு வசந்தமண்டப பூஜை நடைபெறும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (படங்கள்:- உ.சாளின்)

## வெள்ளத்தை அகற்ற நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் மதியம் யாழ்.நகரப்பகுதியில் பெய்த மழையால் வீதிகள், ஒழுங்கைகளில் தேங்கிய வெள்ளப் பாதிப்பு சம்பந்தமாக யாழ்.மாநகரசபையின் துணைமேயர் து.ஈசன் மற்றும் யாழ்.மாநகரசபையின் 02 ஆம் வட்டார உறுப்பினர் ப.தர்சானந் ஆகியோர் நேரடியாகப் பார்வையிட்டு உரிய தரப்புகளினூடாக நடவடிக்கை எடுக்கப்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.நகர் மற்றும் புறநகர்ப்பகுதியில் பெய்த மழையினால் வீதிகள், ஒழுங்கைகளில் வெள்ளம் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதாக பொதுமக்களின் முறைப்பாடுகளையடுத்து யாழ்.மாநகரசபையின் 02ஆம் வட்டாரத்துக்குட்பட்ட சீனியர் ஒழுங்கை மற்றும் கஸ்தூரியார் வீதி - அரசடி வீதிச்சந்தி மற்றும் கே.கே.எஸ் வீதி - சீனியர் வீதி உள் ஒழுங்கை ஆகிய இடங்களில் தேங்கியுள்ள வெள்ள விபரங்களை யாழ்.மாநகரசபையின் 02ஆம் வட்டார உறுப்பினர் ப.தர்சானந்தின் அழைப்பின் பேரில் யாழ்.மாநகரசபையின் துணைமேயர் து.ஈசன் சென்று பார்வையிட்டதுடன், மாநகரசபையின் பொறியியல் பிரிவுடன் கலந்துரையாடப்பட்டதன் பேரில், புத்தாண்டு விடுமுறையின் பின்னர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உறுதியளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சட்டரீதியாக இருப்பதைக்கூட தரமறுக்கிறது சிங்கள அரசு

## மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் சுட்டிக்காட்டு



(கரணவாய்)

சட்ட ரீதியாக இருக்கிற விடயத்தைக்கூட சிங்கள அரசு எமக்கு தரமறுக்கிறது. இதனாலேயே எதிர்க்கட்சி தலைவர் பதவியில் தமிழர் இருக்கக்கூடாது என சிங்கள மக்கள் மத்தியில் போராட்டங்கள் நடக்கிறது. அது சட்ட ரீதியான பதவி. அதை தரமறுக்கும் சிங்கள சமூகமானது.

நாங்கள் கல்வியில் முன்னிலையில் இல்லை எனின் கல்வி ரீதியாக கிடைக்கும் எந்த பதவியையும் எமக்கு தரமாட்டார்கள் என வடமாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் சுட்டிக்காட்டினார்.

வியாபாரிமூலை கலைமணியின் கல்வி கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் மாலை க.கதிரமலை தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பகுதி மாணவர்கள் கல்வியில் முன்னோக்கிச் செல்கிறார்கள்.

இப்பகுதியில் உள்ளவர்கள் கற்றவர்கள். உயர் நிலை பதவி வகிப்பவர்கள்.

கல்வி மூலம்தான் எமது சமூகத்தை வளர்க்க முடியும் என்ற எண்ணம் சார்பாக நடவடிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள். எமது இனத்திற்கு பெருமை சேர்க்கக்கூடிய கல்வியியலாளர்களாக மாணவர்களை உருவாக்க வேண்டும்.

நாம் கல்வியில் முன்னிலையில் இல்லை என்றால் எம் கல்வி வலயங்களுக்கு கூட சிங்கள மொழி பேசுவோரே கல்விப்பணிப்பாளராக வரலாம். அதற்கான இடைவெளி வந்து கொண்டிருக்கிறது. எனத் தெரிவித்தார். (இ-60)








யாழ்.நகர் மைய றோட்டறிக் கழகத்தினரால் யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திற்கு கலை செயற்பாட்டு அறையினை அமைத்து அதனை யாழ்.நகர் மைய றோட்டறிக் கழகத்தின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து நாடா வெட்டி திறந்து வைப்பதை படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# பாரதம்

## பாலியல் வன்முறைகளுக்கு எதிராக பொது மக்கள் ஆர்ப்பாட்டம்




(டில்லி)

காஷ்மீர மாநிலம் கத்துவா, உத்தரப்பிரதேசம் மாநிலம் உன்னாவ் பாலியல் வன் கொடுமை சம்பவங்களை கண்டித்து டில்லி, மும்பை,

இதில் தொடர்புடைய 7 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர். இதேபோல், உத்தரப் பிரதேசம் மாநிலம் உன் னாவ் நகரத்தில் 17 வயது இளம்பெண் பா.ஜ.க எம்.எல்.ஏ

சம்பவத்தில் பா.ஜ.க எம்.எல். ஏ.வை சி.பி.ஐ அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், பெண் கள் மற்றும் குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை



பெங்களூர் உள்ளிட்ட நகரங் களில் பொதுமக்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் கத்துவா பகுதியில் 8 வயது சிறுமி ஆசிபா கொடூரமாக வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள் ளார்.

மீது பாலியல் புகார் கூறி முதல்வர் அலுவலகத்தில் தீக் குளிக்க முயன்றார்.

இதனை அடுத்து, அந்த பெண்ணின் தந்தை பொலிஸ் தடுப்புக்காவலில் கடுமை யாக தாக்கப்பட்டு வைத்திய சாலையில் மரணமடைந் தார். நாடு முழுவதும் கடும் அதிர்வை ஏற்படுத்திய இந்த

களை கண்டித்து டில்லி, மும்பை மற்றும் பெங்களூர் நகரங்களில் பொதுமக்கள் பலர் குடும்பத்துடன் ஒன்று திரண்டு பதாகைகளை ஏந் திய வண்ணம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் பல சிறுமிகளும் கலந்து கொண்டனர். (7)

## மசூதி மீது வெடிகுண்டுத்தாக்குதல் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை



(ஐதராபாத்)

ஐதராபாத் மெக்கா மசூதி மீது வெடி குண்டு தாக்குதல் நடத்திய வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரை யும் விடுதலை செய்து என். ஐ.ஏ. நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

கடந்த 2007, மே 18ஆம் திகதி சார்மினாருக்கு அரு கில் இருந்த மெக்கா மசூதி யில் வெள்ளிக்கிழமை தொழுகை நடந்து கொண்டிருந்த போது சக்திவாய்ந்த வெடிகுண்டு வீசப்பட்டது.

இந்த சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 58 பேர் காயமடைந்தனர். இந்த குண்டு வெடிப்பின் போது வெடிக் காத 2 சக்திவாய்ந்த வெடி குண்டுகளையும் பொலி ஸார் பறிமுதல் செய்தனர்.

இதோடு மசூதிக்கு வெளியே பொலிஸார் நடத்திய துப் பாக்கிச் சூட்டிலும் 5 பேர் உயிரிழந்தனர்.

இந்து அமைப்பைச் சேர்ந்த அசீமானந்த், தேவேந்திர குப்தா, லோகேஷ் ஷர்மா, பாரத்பாய், ரஜேந்தர் செயத்ரி உள்ளிட்ட 8 பேர் இந்த குண்டு வெடிப்பில் தொடர்புள்ள வர்கள் என்று என்.ஐ.ஏ. குற் றம்சாட்டியது.

குற்றவாளிகளில் சுனில் ஜோஷி விசாரணையின் போதே படுகொலை செய்யப் பட்டார். சந்தீர் வி.டங்கே, மத் திய பிரதேசத்தை சேர்ந்த ராம்சந்திர கல்சங்கரா இரண்டு பேரும் விசாரணையில் இரு ந்து தப்பினர். ஏனைய 5 பேர் மீது ஐதராபாத்தில் உள்ள என். ஐ.ஏ. நீதிமன்றத்தில் விசா ரணை நடைபெற்று வந்தது.

விசாரணை முடிந்ததை யடுத்து, நேற்றைய தினம் தீர்ப்பு வழங்குவதாக நீதி மன்றம் அறிவித்தது.

தீர்ப்பு வழங்கப்படுவதை யொட்டி, நீதிமன்ற வளா கத்திற்கு குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் அழைத்து வரப் பட்டு இருந்தனர். நீதிமன் றத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

நண்பகல் அளவில் தீர்ப்பு அளித்த என்.ஐ.ஏ. நீதிமன் றம் குற்றம்சாட்டப்பட்ட அனை வரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர் களுக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் இல்லை என கூறி நீதிமன்றம் விடுதலை செய்வ தாக அறிவித்தது. (7)

## வன்கொடுமை தடுப்புச் சட்ட... அவசர சட்டம் கொண்டுவர ...

(டில்லி)

தலித் வன்கொடுமை தடுப்பு சட்டம் தொடர்பாக உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை தொடர்ந்து, இந்த விவகாரத்தில் அவசர சட்டம் கொண்டுவர மத் திய அரசு பரிசீலித்து வருகிறது.

மராட்டிய மாநிலத்தை சேர்ந்த சுபாஷ் காசிநாத் மகாஜன் என்ற ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர், தன்மீதான எஸ்.சி., எஸ்.டி வன்கொடுமை தடுப்பு சட்ட நடவடிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு மனு செய்தி ருந்தார். அதை விசாரித்த நீதிமன்றம், கடந்த மாதம் 20 ஆம் திகதி பரபரப்பு தீர்ப்பு ஒன்றை வழங்கியது.

அதாவது, தலித் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் அரசு ஊழியர் ஒருவர் மீது கொடுக் கப்படும் புகாரின் பேரில் அவரை உடனடியாக கைது செய்து விடக்கூடாது என் றும், டி.எஸ்.பி. தலைமை யில் பூர்வாங்க விசாரணை நடத்தி அதில் முகாந்திரம் இருந்தால் மட்டுமே மேல் அதிகாரி அனுமதியுடன் கைதுசெய்ய வேண்டும் எனவும் நீதிபதி ஆதர்ஷ் குமார் கோயல் தலைமை யிலான அமர்வு தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்புக்கு பல்வேறு அரசியல் கட்சிகளும், தலித் பிரிவினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த தீர்ப்பு வன்கொடுமை தடுப்பு சட் டத்தை நீர்த்து போகச்செய் யும் என குற்றம் சாட்டிய தலித் பிரிவினர், தீர்ப்பை எதிர்த்து கடந்த 2 ஆம் திகதி நாடு முழுவதும் முழு அடைப்பு போராட்டம் நடத்தினர்.


இதில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஒடிசா, பீகார், பஞ்சாப், அரியானா, டில்லி உள்ளிட்ட வட மாநிலங் களில் பயங்கர வன்முறை வெடித்தது. இதில் சுமார் 10 பேர் கொல்லப்பட்டது டன், நூற்றுக் கணக்கானோர் படுகாயம் அடைந்தனர்.

பின்னர் இந்த தீர்ப்பை எதிர்த்து மத்திய அரசும், தலித் அமைப்புகளின் கூட்டமைப்பும் உச்ச நீதிமன்றில் மறு ஆய்வு மனுதாக்கல் செய்ததுடன், தீர்ப்புக்கு இடைக்கால தடையும் கோரினர். ஆனால் இடைக்காலத் தடை விதிக்க நீதிபதிகள் மறுத்து விட்டனர்.

இந்த வழக்கில் உச்ச நீதிமன்றில் கடந்த வாரம் எழுத்துபூர்வ அறிக்கை ஒன்றை தாக்கல் செய்த அட்டார்னி ஜெனரல் கே.கே.வேணுகோபால், 'மிகவும் சிக்கலான இந்த பிரச்சினை யில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு நாட்டில் ஏராளமான பதற்றம், கோபம், அமைதியின்மை மற்றும் நல்லி ணக்க சீரழிவை ஏற்படுத்தி விட்டது. தலித் வன்கொடுமை தடுப்புச்சட்டத் தில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள சமீபத்திய தீர்ப்பு, அந்த சட்டத்தின் வழிமுறைகளை நீர்த்துப்போக செய்து விட்டது' என்று அதில் கூறியிருந்தார்.

## காஸா எல்லையில் தீவிரவாதிகளின் நீளமான சுரங்கப்பாதை அழிப்பு

### இஸ்ரேல் இராணுவம் நடவடிக்கை



(காஸா)

காஸா எல்லையில் ஹமாஸ் தீவிரவாதிகளால் தோண்டப்பட்ட மிக நீள மான சுரங்கப்பாதை அழிக் கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவ அமைச்சர் அவிக் தார் லைபர்மேன் தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கும் பாலஸ் தீனத்தின் காஸா பகுதி களை ஆக்கிரமித்துள்ள ஹமாஸ் தீவிரவாதிகளுக் கும் இடையே நீண்ட நாட் களாக மோதல் இருந்து வருகிறது. ஹமாஸ் தீவிர வாதிகள் சுரங்கப்பாதைகள் அமைத்து அதன் வழியாக வந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அத்தகைய சுரங்கப் பாதை களை இஸ்ரேல் அழித்து வருகிறது. சுரங்கப் பாதை களை கண்டுபிடிக்க அதிநவீன சிறப்பு ஆயுதங்களை பயன் படுத்தி வருகிறது. இந்த நிலையில் சமீபத்தில் காஸா எல்லையில் மிக நீளமான சுரங்கப்பாதை கண்டுபிடிக் கப்பட்டு அழிக்கப்பட்டது.

ஹமாஸ் தீவிரவாதி களால் தோண்டப்பட்ட இந்த சுரங்கப்பாதை பல கி.மீற்றர் நீளம் கொண்டது. வடக்கு காஸாவில் உள்ள ஜாலியா வில் தொடங்கி இஸ்ரேலின் நகாஸ் ஆஸ் நோக்கி தோண் டப்பட்டிருந்தது. இச்சுரங்கப் பணி முடிவடைவதற்குள் அது கண்டறி யப்பட்டது.

இந்த சுரங்கம் தோண்டும் பணி 2014 ஆம் ஆண்டு காஸா போரின் போது நடைபெற்றுள்ளது. இத்தகைய 30 சுரங்கப் பாதைகள் இதுவரை அழிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இரா ணுவ அமைச்சர் அவிக்தார் லைபர் மேன் தெரிவித்தார். சமீபகாலங் களில் 5 சுரங்கப்பாதைகள் அழிக்கப் பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தேவாலயத்தில் துப்பாக்கிச்சூடு இருவர் பரிதாபமாகப் பலி

(கராச்சி)

பாகிஸ்தானில் உள்ள குவெட்டா நகரில் அமைந் துள்ள தேவாலயம் ஒன்றில் மர்ம நபர்கள் நடத்திய துப் பாக்கிச்சூட்டில் 2 பேர் பரிதாப மாக பலியாகினர்.

பாகிஸ்தான் நாட்டின் குவெட்டா நகரில் அமைந் துள்ள தேவாலயம் ஒன்றில் ஞாயிற்றுக்கிழமைக்கான சிறப்பு பிரார்த்தனை நடை பெற்றது.

பிரார்த்தனை முடிந்து பொதுமக்கள் வெளியே வந்து கொண்டிருந்தனர். அப் போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர் கள் சிலர் வெளியே வந்த வர்கள் மீது கண்மூடித்தன மாக துப்பாக்கியால் சுட்ட னர்.

இந்த திடீர் தாக்குதலில் 2 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து அங்கு வந்த பொலி ஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்ற னர். இதுகுறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த டிசெம்பரில், குவெட்டா நகரில் உள்ள மற்றொரு தேவால யத்தில் நடந்த தற்கொலைப்படை தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். 40 இற்கு மேற்பட்டோர் காயமடைந்த னர் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# வெளிநாடு

## ட்டதீர்ப்பு தொடர்பில் ர அரசு பரிசீலனை

இதற்கிடையே தலித் வன்கொடுமை தடுப்புச்சட்டம் தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு குறித்து பேசிய பிரதமர் மோடி, 'எங்களால் வலிமை மிகுந்ததாக இயற்றப்பட்ட சட்டம், உச்ச நீதிமன்றம் உத்தரவால் நீர்த்து போக விடமாட்டோம்' என்று உறுதியளித்து இருந்தார்.

இந்த நிலையில் தலித் வன்கொடுமை தடுப்பு சட்டத்தை நீர்த்து போகாமல் தடுக்க மத்திய அரசு பல்வேறு மட்டங்களில் ஆலோசனை நடத்தி வருகிறது. இதில் 2 முடிவுகளை எடுத்துள்ள மத்திய அரசு, அதில் ஏதாவது ஒன்றை செயற்படுத்துவது குறித்து பரிசீலித்து வருகிறது.

அதன்படி எஸ்.சி.எஸ்.டி. வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989 இல் இருந்த பழைய வழிமுறைகள் அனைத்தும் உட்படுத்தி அவசர சட்டம் பிறப்பிப்பது அல்லது ஜூலை மாதம் நடைபெறும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் திருத்தச்சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றுவது ஆகிய இரண்டில் ஒன்றை செய்வது என மத்திய அரசு ஆலோசித்து வருவதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவசர சட்டம் கொண்டு வந்தால் கூட பின்னர் அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்து சட்டமாக்க வேண்டியது அவசியம்.

அதேநேரம் அவசர சட்டம் உடனடி பலனை வழங்குவதுடன், உச்ச நீதிமன்ற உத்தரவால் நாட்டில் எழுந்துள்ள கொந்தளிப்பையும் தணிக்கும் என மத்திய அரசு கருதுகிறது.

எனினும் இந்த விவகாரத்தில் இறுதி முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை. உச்ச நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மத்திய அரசு தாக்கல் செய்திருக்கும் மறு ஆய்வு மனு மீதான விசாரணையை பொறுத்தே இதில் முடிவு எடுக்கப்படும் என கூறப்படுகிறது. (7)

## நீதித்துறையின் கண்ணியம் பாதுகாக்கப்பட வேண்டும்

### உச்ச நீதிமன்ற நீதிபதி

(நாக்பூர்)

எதிர்கால தலைமுறையினருக்காக நீதித்துறையின் கண்ணியத்தை பாதுகாக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதி செல்லமேஸ்வர் பேசினார்.

மராட்டிய மாநிலம், புனே நகரத்தில் நேற்று முன்தினம், உச்ச நீதிமன்ற நீதிபதி செல்லமேஸ்வர், என்.எல். பெல்கார் நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

இங்கே நான் யாரையும் குற்றம்சாட்டுவதற்காக வரவில்லை. ஆனால் எனது பேரக்குழந்தைகள் பற்றி நான் கவலைப்படுகிறேன். எனது பேரக்குழந்தைகள் இந்த நாட்டில் கண்ணியத்துடன் வாழ வேண்டும் என்று நான் விரும்பினால், நீதித்துறையை பாதுகாக்க வேண்டும், பலப்படுத்த வேண்டும்.

நாட்டில் உள்ள சமூக பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில், நீதித்துறை பலம் பொருந்தியதாக, சுதந்திரமானதாக, ஆற்றல் வாய்ந்ததாக, பொறுப்புள்ளதாக இல்லாவிட்டால், யாரும் இந்த நாட்டில் பாதுகாப்புடன் இருந்து விட முடியாது.

ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், அவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் எந்த நாட்டினராக இருந்தாலும், அதிகாரம் என்பது மக்களை ஊழல்வாதிகளாக மாற்றி விடுகிறது என்பது வரலாற்று ரீதியிலான உண்மை ஆகும். ஊழல் என்றாலே பணம் சம்பந்தப்பட்ட ஊழல் என்று பொருளாகி விடாது.

அற்புதமான சட்டங்கள் நாட்டில் இருக்கலாம், ஆனால் அந்த சட்டம் முறையாக அமுல்படுத்தப்படாவிட்டால், அதனால் எந்த பயனும் இல்லை.


நமது நாட்டில் குற்ற வழக்குகளில் தண்டனை விகிதாசாரம் வெறும் 5 சதவீதம் மட்டும்தான். இது இரண்டு விடயங்களை காட்டுகிறது. ஒன்று அபத்தமான வழக்குகளை அரசு தரப்பில் போடுகின்றனர் அல்லது நீதிமன்றில் வழக்குகளை நிரூபிக்கிற ஆற்றல் விசாரணை அமைப்புகளுக்கு இல்லை என்பதாகும். இது ஏன் நடக்கிறது? எப்படி விசாரணை அமைப்புகள் தங்கள் பணியை நிறைவேற்ற தவறுகின்றன? இவ்வாறு அவர் பேசினார்.

மத்திய புலனாய்வு அமைப்பு சி.பி.ஐ.யும், அமுலாக்கப்பிரிவு இயக்குநரகமும் மத்தியில் ஆளுகிற கட்சிகளால் தவறாக பயன்படுத்தப்படுவதாகவும் நீதிபதி செல்லமேஸ்வர் சூசகமாக சுட்டிக்காட்டினார்.

கடந்த ஜனவரி மாதம், தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா மீது சரமாரியாக குற்றம் சாட்டி, டில்லியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த மூத்த நீதிபதிகளில் செல்லமேஸ்வர் ஒருவர் என்பது நினைவு கூரத்தக்கது. (7)

## சோதனைச்சாவடிகள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல்; பத்துப் பேர் உயிரிழப்பு

(காபூல்)



ஆப்கானிஸ்தான் நாட்டில் இரு சோதனைச்சாவடிகள் மீது தலிபான் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதல்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் தென்கிழக்கில் உள்ள கன்ஸி மாகாணத்துக்குட்பட்ட ஜக்ஹாட்டு மாவட்டத்தில் உள்ள இரு சோதனைச் சாவடிகள் மீது தலிபான் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் அதிகாலை நடத்திய தாக்குதல்களில் 8 பேர் உயிரிழந்தனர்.

அடுத்ததாக, ஜலாலாபாத் என்ற பகுதியில் உள்ள நன்கர்ஹார் பல்கலைக் கழகத்தின் அருகே காவல் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் பிற்பகல் பணிக்கு இடையே தொழுகையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அவ்வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த பயங்கரவாதிகள் நடத்திய திடீர் துப்பாக்கிச்சூட்டில் இருவர் சம்பவ இடத்திலேயே விழுந்து உயிரிழந்தனர். (7)

## ஏர்செல் - மேக்சிஸ் மோசடி வழக்கு விவகாரம் கார்த்திக் சிதம்பரத்தின் கைது மே 2 வரை நீடிப்பு

(டில்லி)



ஏர்செல் - மேக்சிஸ் வழக்கில் கார்த்தி சிதம்பரத்தை கைது செய்ய சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கத்துறைக்கு விதிக்கப்பட்ட தடை மே 2 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஏர்செல் - மேக்சிஸ் மோசடி வழக்கில் கார்த்தி சிதம்பரத்துக்கு தொடர்பு இருப்பதற்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சட்டவிரோத பணப் பரிவர்த்தனை தடுப்புச் சட்ட ஆணையம் அறிக்கை வெளியிட்டது.

இதையடுத்து அவரை சி.பி.ஐ. மற்றும் அமுலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்யலாம் என பரபரப்பாக பேசப்பட்டது.

இதையடுத்து டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் கார்த்தி சிதம்பரம் முன்ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஓ.பி.ஷைனி, கார்த்தி சிதம்பரத்துக்கு முன்ஜாமீன் வழங்கினார்.

ஏப்ரல் 16 ஆம் திகதி வரை கார்த்தி சிதம்பரத்தை கைது செய்யக்கூடாது எனவும் உத்தரவிட்டார்.

இந்நிலையில் இவ்வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, கார்த்தி சிதம்பரத்தை கைது செய்ய விதிக்கப்பட்ட தடையை மே 2 ஆம் திகதி வரை நீடித்து நீதிபதி ஓ.பி.ஷைனி உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணையும் அன்றைய தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

கார்த்தி சிதம்பரம் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 27 ஆம் திகதி விசாரணைக்கு வருவதால் அவரை கைது செய்ய தடை நீடிக்கப்பட்டுள்ளது.

ஐ.என்.எக்ஸ். மீடியா வழக்கில், கார்த்தி சிதம்பரத்தை, எதிர்வரும் 27 ஆம் திகதி வரை கைது செய்வதற்குத் தடை விதித்து உச்ச நீதிமன்றம் ஏற்கனவே உத்தர விட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (7)

## காவிரி விவகாரம்; கர்நாடகாவுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பா.ஜ.க. செயற்படாது

### முரளிதர் ராவ் தெரிவிப்பு

(சென்னை)




காவிரி விவகாரத்தில் கர்நாடகாவுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பா.ஜ.க. செயற்படாது என அக்கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் முரளிதர் ராவ் தெரிவித்தார்.

காவிரி விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி தமிழகத்தில் போராட்டம் தீவிர மடைந்துள்ளது. ஆனால், தீர்ப்பை நடைமுறைப்படுத்த 3 மாத காலம் அவகாசம் கேட்டு மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. கர்நாடகத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்த அவகாசம் கேட்கப்பட்டிருப்பதாக கூறியுள்ளது.

கர்நாடக தேர்தலை கருத்தில் கொண்டு பா.ஜ.க. காய்நகர்த்தி வருவதாகவும், காவிரி பிரச்சினையை இழுத்தடிப்பதாகவும் தொடர்ந்து குற்றச்சாட்டு கூறப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பா.ஜ.க. தேசிய பொதுச்செயலாளர் முரளிதர் ராவ் நேற்று பெங்களூரில் செய்தியாளர்களை சந்தித்தார்.


அப்போது, காவிரி விவகாரத்தில் மத்திய அரசு மற்றும் பா.ஜ.க.வின் செயற்பாடுகள் திருப்திகரமாக இருப்பதாக தெரிவித்தார்.

காவிரி விவகாரத்தில் மத்திய அரசு மற்றும் பா.ஜ.கவின் பங்கு பெரிய அளவில் உள்ளது.

இந்த விவகாரத்தில் கர்நாடகாவுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பா.ஜ.க. செயற்படாது.

இது குறித்து கர்நாடக தேர்தல் அறிக்கையிலும் வெளியிடுவோம்' என்றார் முரளிதர் ராவ். கர்நாடகாவுக்கு ஆதரவாக முரளிதர் ராவ் பேசியது தமிழக விவசாயிகளிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. (7)

# கட்டுநாயக்க விமான நிலைய கூரை பெயர்ந்து விழுந்தது



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் கூரை பெயர்ந்து விழுந்ததால், குடி வரவுத் திணைக்களப் பணிகள் பாதிக்கப்பட்டன. கடும் மழை காரணமாக, கடந்த வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவுப் பகுதியில் உள்ள கூரை ஆங்காங்கே பெயர்ந்து விழுந்தது.

இதனால் குடிவரவுச் சோதனைகள் நடத்தப்படும் பகுதியில் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

குடிவரவுச் சோதனைக்காக உள்ள பத்து சாவடிகளில், மூன்று சாவடிகள் இதனால் மூடப்பட்டன.

கடும் மழை பெய்யும் போது இதற்கு முன்னரும் கட்டுநாயக்க விமான நிலைய கூரை பெயர்ந்து விழுந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எனினும், இத்தகைய சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. (இ-7)

# கடலில் தத்தளித்த வெளிநாட்டவர்களை காப்பாற்றிய இலங்கைக் கடற்படையினர்



(காலி)

காலி கடலில் விபத்துக்குள்ளான SANDETIE என்ற வெளிநாட்டுப் படகினை இலங்கைக் கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

கடற்படைக்குச் சொந்தமான ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல் மூலம் குறித்த படகு மீட்கப்பட்டு கரைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பாய்மரப் படகின் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் கடற்படைக்கு தகவல் கிடைத்தவுடன், இலங்கை கடற்படையினர் விபத்துக்குள்ளான படகினை மீட்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அதன் பின்னர் கடற்படையினரின் கப்பல் மூலம் அந்தப் படகு மற்றும் படகில் பயணித்தவர்களை பாதுகாப்பாக மீட்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.(இ-7)

# வெளிநாட்டு நடவடிக்கை பணியகத்தை உருவாக்கியது இலங்கை இராணுவம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் புதிதாக வெளிநாட்டு நடவடிக்கை பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது. கொழும்பில் பழைய டச்சு கட்டடத்தில் இந்த வெளிநாட்டு நடவடிக்கைப் பணியகம் கடந்த வியாழக்கிழமை இலங்கை பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னாவினால் திறந்து வைக்கப்பட்டது.

அமைதி மாளிகை 'Mansion of Peace' என்ற பெயரில், இந்தப் பணியகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அனைத்துலக அமைதி காப்பு மற்றும் வெளிநாட்டு நடவடிக்கை கடப்பாடுகளை நிறைவேற்றும் பணிகளை இந்தப் பணியகம் மேற்கொள்ளவுள்ளது.

வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கான பணியகத்தின் பணிப்பாளராக மேஜர் ஜெனரல் மேர்வின் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்காலத்தில், அமைதி காப்பு படைக்கான படைப் பிரிவுகளை அனுப்புதல், அவர்களுக்கான பயிற்சிகள், செயற்பாடுகள் அனைத்தையும் இந்தப் பணியகமே கையாளவுள்ளது.

ஐ.நா. அமைதிப்படைக்காக அனுப்பப்படும் இலங்கை படையினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் மனித உரிமை ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ள நிலையிலேயே, இராணுவம் இந்தப் புதிய பணியகத்தை ஆரம்பித்துள்ளது. (இ-7)

# சிரியாவில் தொடரும் தாக்குதல்கள் தொடர்பாக ஈரான் சபாநாயகர் இலங்கையில் கலந்துரையாடல்

(கொழும்பு)

ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் அலி லாரிஜனி (Ali Larijani) இந்த வாரமளவில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

வியட்நாமிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் அவர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கைக்கு வருகை தரும், அவர் இங்கு பல உயர்மட்ட அரச தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இரு தரப்பு உறவுகள் மற்றும் உலக அரசியல் நிலவரம் குறித்து கலந்துரையாடப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக சிரியாவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள், அதன் நிலைமை குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# இன்று ஒரு தகவல்

## நம்மீது வருத்தமாய் இருக்கிறவர்கள்!

நாம் தெரிந்தோ தெரியாமலோ நிறையப் பேர்களின் வருத்தத்தைச் சம்பாதித்துக் கொண்டு விடுகிறோம்.

மற்றவர்களின் உணர்வுகளை நாம் அலட்சியம் செய்ய நேரிடும் போது இந்த வருத்தம் அவர்களுக்குள் பன்மடங்காக வளர்ந்து வருகிறது.

ஒருவரை அவமானப்படுத்தும் போதும், புண்படுத்தும் போதும், எரிச்சலூட்டும் போதும் அந்தநேரத்தில் நாம் செய்தது சரிதான் என்று நமக்குப் படுகிறது. அது மட்டுமல்ல நம் மனத்தில் எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்துவிட்ட சந்தோசமும் கூடவே ஏற்படுகிறது. நல்லா வேணும் இவனுக்கு என்று பல்லை நறநறக்கிறவர்களும் உண்டு.

ஆனால் நடந்து முடிந்த சம்பவத்தைச் சில நாட்கள், சில மாதங்கள் கழித்துச் சிந்தித்துப் பார்த்தோமானால் நாம் எவ்வளவு பெரிய தவறைச் செய்துவிட்டோம் என்கிற குற்ற உணர்வு ஏற்படும்.

ஆனால் அந்தக் குற்ற உணர்வைக் கௌரவப் பிரச்சினை என்கிற டப்பாவுக்குள் அடைத்துத் தூக்கி எறிந்து விடுகிற பாணியைத்தான் இதுவரை நாம் கையாண்டு வந்திருக்கிறோம்.

உண்மையைச் சொல்லப் போனால் இந்த விடயத்தில் யார் இறங்கிப் போகிறார்களோ, அல்லது யார் விட்டுக் கொடுக்கிறார்களோ அவர்களே வெற்றியாளர்கள்.

அற்பக் காரணங்களுக்காக சண்டை போட்டுக் கொண்டு பிரிந்தவர்களையெல்லாம் திரும்பவும் போய்ச் சந்திக்கும் மனநிலையை மெல்ல வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதெப்படி முடியும்? ஏதாச்சும் சொல்லிட்டா என்கிற ஐயமெல்லாம் வந்தால் நமக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள பொது நண்பர்களைத் தூதனுப்பி நாடிபிடிக்கலாம். கொஞ்சம் மனப்பக்குவம் இருந்தால் நேரிடையாகக் கடிதம் எழுதலாம். இன்னும் கொஞ்சம் தைரியம் வந்தால் போனில் பேசிப் பார்க்கலாம்.

இப்படிப் பேசி அவர்களும் இறங்கி வந்தால் அந்த நட்பு அல்லது உறவுப் பொக்கிஷம் தரும் இன்பத்தை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. அனுபவித்துப் பார்த்தால்தான் புரியும்.

இப்படியெல்லாம் முயன்றும் அவர்கள் அதற்குப் பிரதிபலிக்காமல் இருந்தாலோ புரியாத்தனமாக நம்மீது தொடர்ந்து வருத்தம் கொண்டாலோ அந்த வருத்தத்தைத் துணிந்து அலட்சியம் செய்து விடலாம்.

ஆனால் எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல் அவரை விடுங்க என்று புறக்கணிக்க ஆரம்பித்தோமானால் நம் வட்டம் ஏகமாய்ச் சுருங்கிப் போகும்.

புதியவர்களுடன் நட்பு ஏற்படுத்திக் கொள்வது என்பது இந்த உலகில் அப்படி ஒன்றும் கட்டாயமான விடயமல்ல. ஆனால் மனசுக்குப் பிடித்தவர்களையும் நீண்ட நாள் பழகியவர்களையும் நாம் காரணமின்றிப் பிரிந்து விலகிப் போய் விடக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**



தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சுடன் யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் தொண்டு நிறுவனங்கள் இணைந்து நடத்திய புதுவருடப் பிறப்பு கொண்டாட்டம் நேற்று யாழ்.ஸ்ரான்லி கல்லூரியில் நடைபெற்றது. இதில் பாரம்பரிய விளையாட்டுகள் நடைபெற்றதோடு தொண்டு நிறுவனங்களின் கண்காட்சி கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்வுகளில் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (படங்கள் உ.சாளின்)

## இணையத்தள வடிவமைப்பு பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் இலவசப்பயிற்சிநெறியான இணையத்தள வடிவமைப்பு (Web Designing) நாளைமறுதினம் கரவெட்டி செயலக விதாதா வளநிலையத்தில் நடைபெறும்.

இப்பயிற்சிநெறிகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் 18.04.2018 இற்கு முன்பாக கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென கரவெட்டி பிரதேச செயலாளர் அறியத்தந்துள்ளார். மேலதிக தகவல்களுக்கு 021 226 4958, 077 746 6067, 077 186 9015 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (இ)

## யாழ்ப்பாணத்திற்கான நல்லெண்ண பயணம்



கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் றோட்டரக்ட் கழகத்தினர் எப்போதும் ஏனைய றோட்டரக்ட் கழகத்தினரை விட சிறப்பான முறையில் செயற்பட்டு வருவதையிட்டு பெருமைப்படுபவர்கள். அந்தக் கழகத்தின் பன்முக அங்கத்துவத்தின் ஒருமித்த கலாசாரம் எப்போதும் புதிய முறைகளிலான செயற்றிட்டங்களுக்கு வழியமைத்துக் கொண்டு வந்திருக்கிறது.

இந்த வருடம் யாழ். பல்கலைக்கழகத்துடனும் யாழ். குடாநாட்டிலுள்ள றோட்டரக்ட் கழகங்களுடனும் இணைந்து யாழ்ப்பாண குடாநாட்டில் சமூக சேவை செயற்றிட்டம் ஒன்றினை நடத்துவது என்ற தைரியமான முடிவு ஒன்றினை மேற்கொண்டு அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

"யாழ். பயணம்" என மகுடமிடப்பட்ட இந்த செயற்றிட்டத்தின் பிரதான நோக்கங்களாக பின்வருவன அமைந்திருந்தன.

1. சுற்றுப்புறச் சூழலை சிறந்த முறையில் பேணுவதன் அவசியம்.

2. நல்லுறவு, பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் இணக்கப்பாடு போன்ற முக்கியமான தேவைப்பாடுடைய விடயங்களை வலுவூட்டி முன்னெடுத்தல்

3. நிதி வசதி குறைந்த பாடசாலை மாணவர்கள் கல்விசார் திறமைகளை வெளிக்கொணர ஊக்குவித்தல்.

மேலும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த டெங்கு நோயைத் தடுப்பதன் முக்கியத்துவம் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையை இல்லா தொழிப்பதன் அவசியம் போன்ற விடயங்களும் கவனத்திற் கொள்ளப்படும்.

இதன் முதலாவது படியாக கடந்த வாரம் ரயில் பயணிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாகவும் கழக அங்கத்தவர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ரயில் மூலம் பயணம் செய்தனர். புதுவருடத்தை முன்னிட்டு யாழ். றோட்டரக்ட் கழகங்களுடன் நல்லுறவு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்தனர். அதில் "பொலித்தீனுக்கும் பிளாஸ்ரிக்கிற்கும் விடை கொடுப்போம்"

"டெங்குவை வருமுன் காப்போம்" என்பன பிரதான தொனிப் பொருட்களாக அமைந்திருந்தன. மேலும் பல்கலைக்கழக வளாகத்தினுள் பாடசாலை வளவுகளிலும் மரம் நாட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் றோட்டரக்ட்கழக உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் வியாபார நிறுவனங்கள், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், தொண்டு நிறுவனங்கள் எனப் பலதரப்பட்டவர்களும் பங்கு பற்றியிருந்தனர். (இ)

## புதுவருடச் சந்தை

## கட்டண அறவீடு குறித்து வியாபாரிகள் விசனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நிர்வாகத்தின் கீழுள்ள மைதானத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக புதுவருடச் சந்தையில் ஒரே அளவிலான கடைகளுக்கு வேறுபட்ட கட்டணங்கள் அறவிடப்பட்டதாக வியாபாரிகள் விசனம் தெரிவித்தனர்.

உள்ளூர் வியாபாரிகளுக்கு கூடிய கட்டணமும் பள்ளிவாசலூடாக வந்த வியாபாரிகளுக்கு குறைந்த கட்டணமும் அறவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வித்தியாசத்தினால் விலைகளிலும் ஏற்றஇறக்கம் காணப்பட்டதாகவும் அதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-29)

## பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்ட பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது. எனவே குறித்த சான்றுப்பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 02 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும் படி குற்றவியல் நடைமுறைச்சட்டக் கோவையின் 431(2) இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

வழக்கு இல. BR/274/PC/18MC/1373/PC/17. சான்றுப்பொருள் இல. PR/2436/17. விபரம் 69781083 இலக்க துவிச்சக்கரவண்டி 01, சான்றுப்பொருள் இல. PR/2437/17, விபரம் 69987467 இலக்க துவிச்சக்கரவண்டி 01.சான்றுப்பொருள் இல. PR/2439/17, விபரம் 69958369 இலக்க துவிச்சக்கரவண்டி 01, சான்றுப்பொருள் இல. PR/2440/17, விபரம் 69903916 இலக்க துவிச்சக்கரவண்டி 01, சான்றுப் பொருள் இல. PR/2443/17. விபரம் 69970235 இலக்க துவிச்சக்கரவண்டி 01, சான்றுப்பொருள் இல. PR/2444/17, விபரம் 69791482 இலக்க துவிச்சக்கரவண்டி 01, சான்றுப்பொருள் இல. PR/2446/17, விபரம் 69836394 இலக்க துவிச்சக்கரவண்டி 01, சான்றுப் பொருள் இல. PR/2441/17. இலக்கமற்ற துவிச்சக்கரவண்டி 01. PR/2442/17. இலக்கமற்ற துவிச்சக்கரவண்டி 01. மறுதவணை 13.06.2018. மன்றின் கட்டளைப்படி பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மஞ்சத் திருவிழாவும் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் கொடியிறக்கமும் இடம்பெறும். (இ-7)

## மஹோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகப்பெருமான் தேவஸ்தான விளம்பி வருட மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து பூசைகள் இடம்பெற்று எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெறும். (இ)


கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம்
தகைமை/தொழில்:IT லண்டன்
தொ.இ: B/8466

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்
தொ.இ: B/8469

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 27
உயரம்: 168cm
தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர்
தொ.இ: B/8470

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 6
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ்
தொ.இ: B/8473

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 42
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MSc/தனியார் தொழில்
தொ.இ: G/7610

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 15சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/7612

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BBA/தனியார் தொழில்
தொ.இ: G/7613

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: G/7615

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஆள்பவன் என்ற அகங்காரம் இருக்கும் மட்டும் இலங்கையில் சமத்துவம் ஏற்படப்போவதில்லை

## அமைச்சர் மனோ யாழில் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமத்துவம் இல்லாமல் இனங்களுக்கிடையே ஐக்கியம் ஏற்பட முடியாது என தெரிவித்துள்ள தேசிய சகவாழ்வு கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன், நான் ஆள்பவன் என்ற அகங்காரம் கொண்டவர்கள் ஆட்சியில் இருக்கும் மட்டும் சமத்துவம் ஏற்படப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். யாழ்.ஸ்ரான்லி கல்லூரியில் நேற்று இடம்பெற்ற புதுவருடக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வு.. ஏனைய இனங்களின் கலாசார நடைமுறையை கற்று கொள்வதில் உள்ள ஆர்வம் தான் தேசிய சகவாழ்வு நல்லிணக்கத்தை ஏற்படுத்தும். பெரிய பனர்களை வீதிகளில் கட்டினாலும், அனைத்துமத குருமார்களை ஒரே மேடையில் இருத்திவிட்டாலும் தேசிய ஐக்கியம் ஏற்பட்டு விடாது. இவை எல்லாம் ஏமாற்று வேலைகள். இதனை நான் ஒரு போதும் ஏற்றுக்கொண்டது இல்லை.

நாட்டில் சமத்துவம் இல்லாமல் ஐக்கியம் வராது. ஆண்டானுக்கும் அடிமைக்கும் சமத்துவம் வராது. நான் ஆள்பவன் என்ற அகங்காரம் இந்த நாட்டில் உள்ளவர்களுக்கு இருக்கும் வரை சமத்துவம் வர முடியாது என்பதனை இங்குள்ளவர்கள் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி, பிரதமர் என்னை வைத்து விளையாட முடியாது.

தேசிய சகவாழ்வு அமைச்சராக தமிழர் ஒருவரை நியமித்துக் கொண்டுள்ளோம் என்று அலங்காரம் காட்ட முடியாது. இதனைக் காட்டி பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளியும் வைக்க முடியாது. அதனை ஜனாதிபதியும் பிரதமரும் விளங்கிக் கொள்ள வேண்டும். சிங்கள மொழியை கற்காமல், சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களுடைய பிரச்சனைகளை விளங்கப்படுத்தி அவர்களுடைய ஆதரவை பெறாமல், தமிழ் மக்களிடையே இனவாதத்தை தூண்டிவிட்டு மலர் மாலைகளை, பொன்னாடைகளை மற்றும் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்று பதவியில் இருந்திருக்க முடியும். ஆனால் அப்படி இருக்க நான் விரும்பவில்லை. ஆதலால் தான் சிங்கள மொழியை கற்றேன். இதன்மூலம் எங்கள் பிரச்சினைகளை தெற்கிற்கு கூறி வருகின்றேன்.

வடகிழக்கு மக்கள் எனக்கு வாக்களிக்கவில்லை. ஆனால் நான் அந்த மக்களின் கண்ணீரை, ஆத்திரங்களை சிங்கள தேசத்திற்கு புரியும்படி கூறிக் கொண்டிருக்கிறேன். தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ரீதியில் தான் நான் செயற்பட்டுக் கொண்டுள்ளேன். 100 வீதம் சிங்களவர்களை திருப்திப்படுத்த முடியாத போதிலும் கணிசமான சிங்களவர்களை திருப்திப்படுத்த முடியும்.

எங்கள் அரசிற்குள்ளும் இனவாதத்தைத் தூண்டும் சிங்கள, முஸ்லிம், தமிழ் அரசியல் வாதிகள் உள்ளார்கள். இதேபோன்று பொது எதிரணியினரும் இனவாத்தத்தைத் தூண்டுபவர்களாகத் தான் உள்ளார்கள்.

முதலில் நாங்கள் அனைவரும் இலங்கையர்கள். அதற்கு பின்னர் தான் மத, மொழி அடையாளங்களாகும். அதற்காக ஒவ்வொரு இனங்களும் தமது தனித்துவங்களை விட வேண்டும் என்றில்லை.

ஒவ்வொரு இனங்களின் தனித்துவங்கள் தனித் தனியே பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே அனைவரும் இதனைப் புரிந்து கொண்டு இனவாதத்தை தூண்டாமல் செயற்பட வேண்டும். பாராளுமன்றத்தில் இருக்கின்ற 225 பேரில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பிரதேச சபைகளுக்குக் கூடச் செல்லத் தகுதியில்லாதவர்கள்.

இவ்வாறானவர்களால் தான் பிரச்சினைகள் தோன்றுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## வீதி விதிமுறைகளை மீறிய 10 பேரும் பிணையில் விடுவிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, வவுணதீவு பகுதியில் கைது செய்யப்பட்ட 10 பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். வீதி விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தியமை தொடர்பில் குறித்த 10 பேரும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதன்போது குறித்த 10 பேரின் வாகனங்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 23

பரமசாமி பஞ்சாட்சரம்

ஆறாம் நாள்
7.08.14 நையிலம்

வியாழக்கிழமை காலை "நையிலம்" விடுதியில் இருந்து சாகா (Saga) என்னும் இடத்திற்குப்புறப்பட்டோம். சாகாவிற்கு 245 கி.மீ.வரை செல்ல வேண்டும். சிறிது தூரம் சென்றதும் பாலைவனம் ஆரம்பித்து விட்டது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கற்பூமிதான் தெரிந்தது. ஒரு மலைத் தொடரை ஏறிமுடிந்ததும் "லபுக்லா பாஸ்" (Labug La) என்னும் இடம் வந்தது. இந்த இடத்தின் உயரம் 5050மீ. ஆகும். இங்கு பல பக்கங்களிலிருந்தும் குளிர் காற்று வீசிக்கொண்டிருந்தது. இந்த இடத்தைப் பற்றிய விபரங்களைச் சொல்லியதுடன் எங்கள் உடல் நலத்தையும் விசாரித்தார்கள். இங்கு சீன அரச ஊழியர்கள் வாசல் முகப்புக் (gate way) கட்டடத்தைப் புதிதாக அமைத்துக் கொண்டு இருந்தார்கள்.

நாங்கள் 10 நிமிடங்கள் வரை இந்த இடத்திலே தங்கினோம். பின்பு பயணத்தைத் தொடர்ந்து பாலைவன வழியாலே சென்று கொண்டே இருந்தோம். இங்கெல்லாம் எமது உடல் உள்ளுறுப்புகள் சிரமப்படுவதை உணரக் கூடியதாக இருந்தது. நாங்கள் பிரமபுத்திரா நதியை அடைய மாலை நேரமாகிவிட்டது.


நாங்கள் இங்கு பிரமபுத்திரா நதியைக் கடக்க வேண்டும். இந்த வருடம் நதியைத் தாண்டுவதற்கு புதிய பாலம் அமைத்து விட்டார்கள். ஆகையால் புதிதாக அமைக்கப்பட்ட பாலத்தினூடாகச் "சாகா" என்னும் நகரத்தைச் சுலபமாக வந்தடைந்தோம். சென்ற வருடம் யாத்திரை சென்றோர் பயணப் படகு மூலம் சிரமப்பட்டு நதியைக் கடந்ததாக அறிந்தோம்.

சாகா நகரத்தைச் சுற்றிப் பார்த்தோம். அங்கு அநேகமானோர் கடைகளிலே யாத்திரைக்குத் தேவையான பொருட்களை வாங்கினார்கள். நாங்களும் எமக்குத் தேவையான பிராணவாயுப் புட்டிகளை வாங்கினோம். அன்றிரவு சாகா விடுதியிலே தங்கினோம்.

ஏழாம் நாள் 8.08.14
சாகாவில்

சாகா பழைமையான ஒரு சிறிய நகரம் (உயரம் 4450மீ.) இங்கு பிரமபுத்திரா நதி பாய்வதால் புல்வெளிகள் அதிகம். இங்கு ஆடு "ஜக் (Yak)" போன்ற மிருகங்களை வளர்க்கின்றார்கள். இங்கிருந்து மானசரோவருக்கு 500 கி.மீ. வரை செல்ல வேண்டும். அன்று காலை உணவின் பின் மானசரோவருக்குப் புறப்பட்டோம். நாங்கள் புதிதாக அமைக்கப்பட்ட பாதை வழியே சென்றோம். ஒரு மலைத் தொடரைத் தாண்டிய பின் "மேயும்லா பாஸ்" (Mayum La pass) என்னும் இடத்தில் பேருந்தை நிறுத்தினார்கள். உணவின் பின் மீண்டும் காட்டுப் பாதையில் சென்று மானசரோவர் என்ற இடத்தை அடைந்தோம்.

கயிலாச மலையும் மானசரோவர் ஏரியும்/ Mt.Kailash and Manasarovar Lake



ஏழாம் நாள் 8.08.14
மானசரோவர் ஏரி

வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானசரோவர் ஏரியில் (4590மீ.) பார்வை மண்டபத்திற்கு வந்து சேர்ந்தோம், முதலில் மண்டபத்தைப் பார்வையிட்டோம்.

இது புதிதாகக் கட்டப்பட்ட மண்டபம் என்பதை அறிந்தோம். இங்கு பாதுகாப்பு அதிகாரிகள் அதிகமானோர் நடமாடினார்கள். மானசரோவர் ஏரியைக் கிரிவலம் வருவதற்கும், ஆச்சிரமங்கள், புத்த கோவில்கள் ஆகிய இடங்களிற்குச் சென்று தரிசனம் செய்வதற்கும் தேவையான பேருந்துகளையும் வழிகாட்டுபவர்களையும் இங்கு தான் ஒழுங்கு செய்கின்றார்கள். இங்கு ஏராளமான பேருந்துகள் தயாரான நிலையில் காணப்பட்டன.

(தொடரும்)

# இணையத் தளத்தின் ஊடாக நிறுவனங்களைப் பதியமுடியும்

(கொழும்பு)

நிறுவனங்களைப் பதிவு செய்தல் உள்ளிட்ட பல சேவைகளை இணையத் தளத்தின் ஊடாக மேற்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக. கம்பனிகளைக் கூட்டுத்தாபனமாக்குதல் மற்றும் நிறுவனங்களின் இலச்சினையை அங்கீகரித்தலுக்கான கடித ஆவணங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் அது தொடர்பான கொடுப்பனவுகளை இணையத் தளத்தின் ஊடாக மேற்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான சேவைகள் குறித்த விபரங்களை eroc.drc.gov.lk என்ற இணையத்தளத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும். (இ-7)

# இருதய சத்திர சிகிச்சைப் பிரிவை புனரமைக்கும் பணிகள் விரைவில் பூர்த்தி



(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்திய சாலையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவை புனரமைக்கும் பணிகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

60 வருடங்கள் பழைமை வாய்ந்த இரண்டு சத்திர சிகிச்சைக் கூடங்கள் தற்போது திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒன்றின் புனரமைப்புப் பணிகள் முழுமையாக பூர்த்தியடைந்துள்ளன. மற்றைய சத்திர சிகிச்சை கூடத்தின் புனரமைப்புப் பணிகள் விரைவில் பூர்த்தியடைந்து விடுமென சுகாதார அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பழைய சிகிச்சைக் கூடங்களில் கிருமிகள் பரவும் ஆபத்து காணப்படுகின்றது. அதனால். இவற்றைப் புதுப்பிக்க தீர்மானிக்கப்பட்டது. இலங்கை இராணுவம் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இருதய நோயாளர்களுக்கான சிகிச்சைகளை விசேட வைத்தியர்கள் நாடு பூராகவும் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களின் அந்த சேவையைப் பாராட்டியுள்ள சுகாதார அமைச்சர் 24 மணி நேரமும் சுயமாகவே இந்த வைத்தியர்கள் சிகிச்சையில் ஈடுபடுவது ஏனைய வைத்தியர்களுக்கு ஒரு முன்மாதிரியாகும் எனக் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் சிறந்த நூற் பரிசுப் போட்டி-2017 வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள "கலை இலக்கிய நாடக மன்றாங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி", "முதலமைச்சர் விருது 2018", "இளம் கலைஞர் ஊக்குவிப்பு பரிசு- 2018" என்பவற்றிற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவற்றிற்கான முடிவுத் திகதி 20.04.2018 ஆகும்.

இவற்றிற்கான விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் கரவெட்டி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தெரிவித்துள்ளார். (இ

# அரங்கின் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தின் ஏற்பாட்டில் கலைவாணர் கலை அரங்க திறப்பு விழாவின் முதலாம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தலைமையில் இடம் பெறவுள்ளது. காலை மற்றும் மாலை என இரண்டு அமர்வுகளாக இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயும் சிறப்பு விருந்தினர்களாக வைத்திய நிபுணர் ப.ஶ்ரீகிருஷ்ணா , பிரபல வர்த்தகர் செ.மகேந்திரன் மற்றும் தொழிலதிபர் சே.சந்திரலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கல்வி அமைச்சின் ஓய்வு நிலை மேலதிக செயலாளர் உடுவை.தில்லை நடராஜா. வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி. வேலணை பிரதேச செயலாளர் எ.சோதிநாதன். நியூ ரங்கனஸ் ஹோம் பில்டர்ஸ் செயலாளர் யாழ்.தர்மினி பத்மநாதன். சுவிஸ் புங்குடுதீவு ஒன்றிய பொருளாளர் எ.கைலாசநாதன். வேலணை பிரதேச சபை உறுப்பினர்களான க.நாவலன் மற்றும் க.செந்துரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். (இ-7)



அராலி மத்தி ஶ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 78 ஆம் ஆண்டு நிகழ்வுகள் சித்திரைப் புதுவருடப்பிறப்பன்று இரவு நிலைய கலையரங்கில் தலைவர் யசிகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் தேசிய நல்லிணக்க அமைச்சின் செயலாளர்.வே.சிவஞானசோதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (படங்கள்:- பொ. சோபிகா)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1386

Search for people, places and things    Nagendram  Home

## ஹர்சினி

நாம் பிறருக்காக வேண்டும் போது கடவுள் அவருக்கு அருள் புரிகின்றார்...



நாம் மகிழ்ச்சியாக இருக்கின்றோம் என்றால் நமக்காக யாரோ வேண்டுகின்றனர் என்று அர்த்தம்

## சந்தியா

கவலைகள் வந்துகொண்டுதான் இருக்கும் அதனை நிரந்தரமாக்குவதும் தற்காலிகமாக்குவதும் உன்னிடம் தான் இருக்கின்றது



நிரந்தரமாக்கினால் நீ நோயாளி, தற்காலிகமாக்கினால் நீ புத்திசாலி

## சர்வா

மனைவியை எங்கும் விட்டுக்கொடுக்காத கணவன், கணவனிடம் எதையும் மறைக்காத மனைவி



நண்பர்கள் போல் பழகும் பிள்ளை. இவை யாவும் அமைந்தால் வாழ்க்கை சொர்க்கமே...!

## சாருகேசி



மச்சான் தமிழ் முதல் நாள்ல எப்படியும் 98 மார்க் வந்துடும்டா



எப்படி மச்சான்...? கடைசி பக்கத்துல நீ உண்மையான தமிழனா இருந்தா 98 மார்க் போடுறான்னு எழுதி வச்சிட்டேன்டா

## சபேஷ்

தூக்க மாத்திரை ஒன்னு போட்டா நல்லா தூக்கம் வரும்!



அதே நாலஞ்சு போட்டா உன்னைத் தூக்க ஆள்வரும்...

## சாருஜன்

சரிதானே...




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# யாழ்.கொக்குவில் இந்து மாணவி சித்திரப் போட்டியில் இரண்டாமிடம்



(கொழும்பு)

அகில இலங்கை ரீதியில் இடம் பெற்ற ஓவியப்போட்டியில் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி எஸ். லாவண்யா இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.

கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் "வான் ஓவியம்" எனும் தலைப்பில் இலங்கை விமானப் படை யினரால் அகில இலங்கை ரீதியிலான சித்திரப் போட்டி தரம் 1-5, தரம் 6-9, தரம் 10-13 என்ற 3 பிரிவுகளாக பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்டது. 22649 மாணவர்கள் பங்கு பற்றிய போட்டியில் மேற்படி மாணவி 3 ஆவது பிரிவில் 2 ஆவது இடத்தை பெற்றுள்ளார்.

பெறுமதியான பணப் பரிசிலுடன் உலங்குவானூர்தி மூலம் இலங்கையைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பையும் இவர் பெற்றுள்ளார். மூன்று பிரிவுகளிலும் பரிசு பெற்ற முதல் 9 பேர்களில் இவர் ஒருவரே தமிழ் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# தலைமுடியால் வாகனத்தை இழுத்து சாதனை





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஹயஸ் வாகனத்தை ஒரு கிலோ மீற்றர் தூரம் தன் தலைமுடியினால் கட்டி இழுத்து குடும்பஸ்தரொருவர் சாதனை படைத்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் பறக்கும் கழுகு விளையாட்டுக் கழகத்தின் 43 ஆவது வருட நிறைவை முன்னிட்டும், தமிழ்- சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டும் புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்திற்கருகில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் கலாசாரப் பெருவிழா சிறப்பாக இடம்பெற்றது.

இதன் ஒருகட்டமாக சாகச நிகழ்வு புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கருகில் பலாலி பிரதான வீதியில் பிற்பகல் 5 மணியளவில் ஆரம்பமாகியது.

இதன்போது யாழ். தையிட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவரும் தற்போது மட்டுவில் பகுதியில் வசித்து வருபவருமான 54 வயதுடைய செல்லையா திருச்செல்வம் ஹயஸ் வாகனத்தில் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட கயிற்றைத் தனது பின்னம் தலைமுடியில் முடிச்சுப் போட்டுத் தொடர்ச்சியாக ஹயஸ் வாகனத்தை ஒரு கிலோ மீற்றர் தூரம் இழுத்துச் சாதனை படைத்துள்ளார்.

அங்கு கூடியிருந்த இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் உள்ளிட்டோர் ஆரவாரம் செய்து குடும்பஸ்தரின் சாதனை முயற்சியை வரவேற்றனர். (இ-7)

# இலத்திரனியல் உலகத்தில் கல்வியை எதிர்கொள்ளல் மிகப் பெரிய சவாலாகும்

## சிறீதரன் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய நவீன இலத்திரனியல் உலகத்தில் கல்வியை எதிர்கொள்ளல் என்பது மிகப்பெரிய சவாலாகும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். புலோலி அபிவிருத்திநிதியத்தின் கல்விக்கு கைகொடுப்போம் வருடாந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.





அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நவீன உலகத்தின் சவால்களை எதிர்கொண்டு தங்களை ஒழுக்க நெறியின் பால் கல்வி ரீதியாக வளர்த்துச் செல்ல துணியவேண்டும். இன்றைய நவீன இலத்திரனியல் உலகத்தில் கல்வியை எதிர்கொள்ளல் என்பது மிகப் பெரிய சவாலாகும். தொலைக்காட்சிகளின் நவீனத்துவ தொடர்வரவுகள், கணினிகளினூடான ஈர்ப்பு, இணையத்தளங்கள் ஊடான ஆர்வம், முகநூல்களுக்கூடான மாணவர்களின் செயற்பாடு என்பன பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளில் பாரிய தாக்கத்தை செலுத்துகின்றன. கையடக்கத் தொலை பேசிகள் என்பதும் கணனிகள் என்பதும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளையும் வாசிப்புத்திறனையும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் உறிஞ்சி எடுக்கின்றன. இந்த சூழ்நிலையில் மாணவர்கள் பாடசாலைக்கல்வி, பாடசாலையின் உடல் உளம் சார்ந்த புறக்கிருத்திய செயற்பாடுகளில் ஈடுபடுதல் பெருமளவில் தடுக்கப்படுகிறது. இவ்வாறான சூழலில் ஏழை மாணவர்களின் நலன்கருதி புலோலி அபிவிருத்தி நிதியம் எடுத்திருக்கும் முயற்சியை உளமார பாராட்டுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

வடமராட்சி வலயக் கல்வியுணிப்பாளர் சுரேஸ்குமாரின் நெறிப்படுத்தலில் புலோலி அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் வைத்திய கலாநிதி திருமதி முல்லை பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம், புலோலி அபிவிருத்தி இணையத்தின் இணைப்பாளர் தம்பையா சிவகுருநாதன், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை யின் தவிசாளர் த.ஐங்கரன், பண்டிதர் பரந்தாமன் உட்பட அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பெருமளவானோர் பங்குபற்றினர். (இ)

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களுக்குமான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகுமென, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பதிவாளர் வீ.டீ. கித்சிறி தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பீட மாணவர்களும் 22ஆம் திகதி தத்தமது விடுதிகளுக்கு சமுகமளிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 44 நாட்களாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பானது 17 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்துள்ள நிலையில், பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

2018 ஜனவரி மாதத்தில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

2017 டிசெம்பர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருந்தது. அது 2 இலட்சத்து 44 ஆயிரத்து 536 ஆக பதிவாகியிருந்தது. அதற்கு அடுத்ததாக கடந்த ஜனவரி மாதம் கூடுதலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இதன்படி 2 இலட்சத்து 38 ஆயிரத்து தொள்ளாயிரத்து 24 பேர் வந்திருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (இ-7)

# வீதி விபத்தில் சிக்கிய தந்தை, குழந்தை பலி

(கொழும்பு)

எல்ல பிரதேசத்தில் இடம் பெற்ற வீதி விபத்தில் சிக்கிய 31 வயது நபர் ஒருவரும் அவரது குழந்தையும் உயிரிழந்துள்ளதோடு, அவரது மனைவி காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை எல்ல - கும்டுக்வெல பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மூவரும் பயணித்த கார் வீதியில் குடை சாய்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த மூவரும் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், 31 வயது நபரும், 3 வயது குழந்தையும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். (இ-7)

# புத்தாண்டு கொண்டாட்டம்



(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டிருந்த வெளிநாட்டவர்களும் புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

புத்தாண்டை முன்னிட்டு களுத்துறை கடற்கரைக்கு அருகாமையிலுள்ள ஹோட்டல்களில் சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்களினால் இந்த விளையாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் பல வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இணைந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வில் கயிறு இழுத்தல், பனிஸ் சாப்பிடுதல் போன்ற விளையாட்டுகளில் மிகவும் ஆர்வத்துடன் வெளிநாட்டவர்கள் ஈடுபட்டனர்.

அத்துடன் சிங்கள பெண்கள் போன்று உடை அணிந்து வெளிநாட்டு பெண்கள் அங்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்



திரு. குலசிங்கம் திலீபன்

NDT(merit), M.A(Pub.Admin.),PGIDE,MEd,PGDEM(Merit),SLPS-2

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அதிபர் திரு.குலசிங்கம் திலீபன் அவர்கள் அதிபர் தரம் 2 இற்கு பதவியுயர்வு பெற்றமையை யிட்டு நண்பர்களாகிய நாம் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

-நண்பர்கள்-

திரு.கு.விமலன் , திரு.ப.கணேசன்

(3649)

# லண்டனில் இலங்கையர்களால் மகிழ்ச்சியடைந்த மைத்திரிபால



(கொழும்பு)

பொதுநலவாய நாடுக ளின் தலைவர்கள் கூட்டத் தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பிரித்தானியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

எதிர்வரும்21ஆம்திகதிவரை பொதுநலவாய மாநாடு லண் டனில் நடைபெறவுள்ளது.

இதற்காக பிரித்தானியா நோக்கி சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண் டன் நகரை சென்றடைந்தார்.

இதன்போது லண்டனில் உள்ள இலங்கையர்களால் ஜனாதிபதிக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பாரம்ப ரிய உடையில் இருந்த லண் டன் வாழ் இலங்கையர்கள் ஜனாதிபதிக்கும் அவரது பாரி யாருக்கும் வெற்றிலை கொடு த்து வரவேற்றுள்ளனர்.

இதனால் மகிழ்ச்சியடை ந்த ஜனாதிபதி "2018ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள லண்டன் வந்தடைந்தேன்,

• அன்பான வரவேற்புக் காக பிரித்தானியாவில் இருக் கும் இலங்கையர்களுக்கு நன்றி." என ஜனாதிபதி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டு ள்ளார். (இ-7)

# எங்களை எந்த சக்தியும் விலை பேசிவிட முடியாது

## சாவகச்சேரி உப நகர பிதா உறுதி

(சாவகச்சேரி)

தமிழ்த்தேசியத்தின் பெய ரால் ஆட்சி அமைத்த எங் களை எந்த ஒரு சக்தியும் விலை பேசிவிட முடியாது என சாவ கச்சேரி நகரசபையின் உப நகர பிதா அ.பாலமயூரன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக இயங்கி வந்த கொல்களம் ஒன்று அண்மையில் சாவகச்சேரி நகராட்சிமன்றத்தினால்கண்டு பிடிக்கப்பட்டு சீல் வைக்கப்ப ட்டு சட்டநடவடிக்கைக்கு உட் படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது சட்டநடவடிக் கைக்கு உட்படுத்தாமல் இரு க்குமாறு அமைச்சர் ஒருவர் நகராட்சி மன்றத்துக்கு அழுத் தம் வழங்குவதாகவும் தவி சாளரிடம் கோருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள் ளமை தொடர்பாக உப நகர பிதாவிடம் ஊடகவியலாளர் கள் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள் ளார்.

சாவகச்சேரி நகராட்சி மன் றத்திலே இன,மத,மொழி பாகுபாடின்றி அனைவருக் கும் சரிநிகர் சமனான வகை யிலேயே எமது பணிகள் உள்ளன.

யாரும் எங்களை கேள் விக்கு உட்படுத்தாத வகை யிலேயே எமது கடந்த கால ஆட்சியை வழங்கியிருந் தோம்.

அதேபோலவே மீண்டும் தமிழ்த்தேசியக்கூட்டமைப் பின் ஆட்சி எங்களுக்கு ஆதர வான தரப்பினருடன் நேர் மையாக துணிச்சலோடு நடத் தப்படுகின்றது.

போலித்தமிழ்த்தேசியம் பேசி எதற்குமே பிரயோசனம் இல்லாத உறுப்பினர்களை விலைக்கு வாங்கினாலும் எங்களை எவரும் விலை பேச முடியாது அவர் மேலும் தெரிவித்தார். (இ-89)

# கடலில் மூழ்கி குடும்பஸ்தர் பலி

(திருமலை)

திருகோணமலை - சேரு நுவர பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட லங்காபட்டுண கடல் பகு தியில் குளித்துக் கொண்டிரு ந்த குடும்பஸ்தர் ஒருவர் கட லில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் சேரு நுவர பகுதியைச் சேர்ந்த 45 வயதான இரண்டு பிள்ளை களின் தந்தை என தெரிவிக் கப்படுகிறது.

நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் குறித்த நபர் லங் காப்பட்டுண கடலுக்குச் சென்று உறவினர்கள், நண்பர்களு டன் நீராடி பொழுதை போக் கிக் கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இவர் கடலில் நீராடும்போது அதிக மது போதையில் காணப் பட்டதாக பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. லங்காப்பட்டுண கடற்படையினர் சடலத்தை மீட்டு சேருநுவர பிரதேச வைத் தியசாலைக்கு கொண்டு சென்றனர். (இ-7)

# காலிக்கடலில் புராதன புத்தர் சிலை



(காலி)

காலி- கோட்டையை அண் டிய கடற்பிரதேசத்தில் சுழியோ டிகளால் இரண்டரை அடி உயரமுள்ள புத்தர் சிலையொ ன்று மீட்கப்பட்டுள்ளது. மீட்கப் பட்ட சிலை அப்பிரதேசத்தில் உள்ள சுதர்மாராம விகாரை யில் கையளிக்கப்பட்டுள்ளது.

சுமார் 40 கிலோ கிராம் வரை நிறையுள்ள இச்சிலை தொடர் பில் அப்பிரதேச பொலிஸ் மற் றும் தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம் என்பவற்றுக்கு தெரி யப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உரிய ஆய்வுகள் நேற்று மேற் கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெருகல் பிரதேச சபையின் ஆட்சி கூட்டமைப்பு வசம்




(திருமலை)

திருமலை வெருகல் பிர தேச சபையை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு கைப்பற்றி யுள்ளது. வெருகல் பிரதேச சபையின் தவிசாளராக தமி ழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் க.சுந்தரலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பிரதி தவிசாளராக சங்கர் ஏகமனதாக தெரிவு செய்யப் பட்டுள்ளார். (இ-7)

# தலைக்கு எண்ணெய் வைத்தல்



(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண் டில்தலைக்கு எண்ணெய்தேய் க்கும் மலையகத்தின் பிர தான நிகழ்வு, ஹற்றன் நீக் ரோதாரம விகாரையில் நேற்று முற்பகல் 10.16 மணியளவில் விகாரையின் பிரதான தேரர் மாகம விமலதேரர் தலை மையில் இடம்பெற்றது.

இந்த எண்ணெய் தேய் க்கும் நிகழ்விற்கு தமிழ், சிங் கள, முஸ்லிம் ஆகிய இனத் தவர்கள் கலந்து கொண் டமை விசேட அம்சமாகும். மேலும் பொலிஸ் உத்தியோ கத்தர்கள் உட்பட பலர் கல ந்து கொண்டனர். (இ-7)

# கடற்கரையில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள்





(கொழும்பு)

விளம்பி வருட சித்திரை புத்தாண்டை முன்னிட்டு காரைதீவு விளையாட்டு கழ கத்தின் ஏற்பாட்டில் சமுத்திர படகோட்டப் போட்டி நடை பெற்றது.

குறித்த போட்டி நேற்று முன்தினம் கரையில் திர ண்டிருந்த ஆயிரக்கணக் கான மக்கள் முன்னிலை யில் நடத்தப்பட்டது.

காரைதீவு கடலில் நடை பெற்ற இந்த போட்டியில் 10 இயந்திரப் படகுகள் பங்கு பற்றியிருந்தன. (இ-7)



குப்பிளான் தெற்கு ஞானகலா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் நிலையத் தலைவர் க.சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக செ.நவரட்ணராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் ச.கிருபானந்தனும் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய அதிபர் செ.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சக்தி)




# அவசரபுத்தி மத்திமம்



கார்த்திகாவிடம் ஒரு பேனா இருந்தது. அவளுடைய பத்தாவது பிறந்தநாளுக்கு அவளின் அப்பா பரிசாகத்தந்தது.

"நீ இதை ஸ்கூலுக்குக் கொண்டு போகக்கூடாது! வீட்டில வைச்சுத்தான் எழுதனும் என்றார் அம்மா. கார்த்திகாவும் 'சரி' என்று தலையாட்டினாள். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. அதற்குக்காரணம் உண்டு. அவளின் வகுப்புத்தோழி ஒருத்தி, ஏதேனும்விலை உயர்ந்த பொருளை அவ்வப்போது பள்ளிக்குக் கொண்டு வருவாள். அதை மற்றவர்களிடம் காட்டி பெருமைப்பட்டுக் கொள்வாள். அவளைப்போன்று தானும் ஏதாவது ஒன்றைக் கொண்டுபோய் அனைவரிடமும் காட்டவேண்டும் என்ற எண்ணம் வந்தது கார்த்திகாவிற்கு. அதனால் பேனாவைப் பள்ளிக்கூடம் கொண்டு போனாள்.

வகுப்புத்தோழிகள் அனைவரும் அந்தப் பேனாவை வைத்த கண் வாங்காமல் பார்த்தார்கள். அதன் நேர்த்தியான வடிவமைப்பு மென்மையான பிடிமானம், எழுதும் போது தாளில் சரளமாக நகரும் தன்மை ஒரு சாதாரண பேனாவிற்கும் விலை உயர்ந்த பேனாவிற்கும் இடையே இருந்த வித்தியாசத்தை அந்தச் சிறுமியரால் நன்கு உணர்ந்து கொள்ள முடிந்தது. அன்றைக்குக் கார்த்திகாதான் வகுப்பின் நட்சத்திரமாக ஜொலித்தாள். பெருமிதம் தாளவில்லை அவளுக்கு.

ஒருநாள் வீட்டுப்பாடம் எழுத உட்கார்ந்தபோது அவளுக்கு பேனாவின் நினைப்புவந்தது. பையைப் பார்த்தாள். பேனா இல்லை. அம்மாவிடம் ஓடினாள். "ஸ்கூல்பேக்ல வைச்சிருந்த என்பேனாவைக் காணேம்மா! என் பிரெண்ட்ஸ்தான் யாராவது எடுத்திருப்பாங்கன்னு நினைக்கிறேன்! நான் மிஸ்கிட்ட போயி சொல்லப்போறேன்!" என்றாள் படபடப்புடன்.

"பேனா இங்கதான் எங்கயாவது இருக்கும்! நான் தேடிப் பார்த்து எடுத்துத்தர்றேன்! நீ மிஸ்கிட்ட புகார் செய்யக்கூடாது!" என்றார் அம்மா கண்டிப்பான குரலில். பேனா காணாமல் போன ஆற்றாமையில் அழுகை வெடித்தது கார்த்திகாவிற்கு. யார் எடுத்திருக்கக்கூடும்? மறுநாள்பள்ளிக்கூடம் போனதும் தனது தோழிகள் அனைவரிடமும் கேட்டாள்.

தாங்கள் எடுக்கவில்லை என்று அவர்கள் சத்தியம் செய்தார்கள். வகுப்பு ஆசிரியையிடம் சொல்ல வாய் வரை வார்த்தைகள் வந்து விட்டன. அவர் அனைவரையும் கூப்பிட்டு விசாரித்து வாங்கிக் கொடுப்பார். ஆனால் அம்மா கூடாது என்று சொல்லியிருந்ததால் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

கார்த்திகாவின் அம்மா வீடு கூட்டும் போது அங்கே இங்கே தேடிப்பார்த்தார். பேனா கிடைக்கவில்லை. பேனா காணாமல் போய் கிட்டத்தட்ட ஒரு மாத காலம் ஆகியிருக்கும். ஒருநாள் படுக்கை அறையைச் சுத்தம் செய்த போது பேனா கிடைத்தது. கார்த்திகாதான் தவறுதலாக பேனாவை மெத்தைக்கடியில் விட்டிருக்கிறாள். பேனா திரும்பக் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் கார்த்திகா துள்ளிக்குதித்தாள். ஆனால் அவளின் அம்மாவோ அவளிடம் மெதுவாக "விநோதினி ஒரு விஷயம் ஞாபகம் இருக்கா?" என்று கேட்டார்.

விநோதினியும் கார்த்திகாவின் வகுப்புத்தோழிதான். அவள் ஒருநாள் யாருக்கும் தெரியாமல் தங்கமோதிரம் ஒன்றை பள்ளிக்குக் கொண்டு வந்துவிட்டாள். வந்த இடத்தில் மோதிரம் தொலைந்து விட்டது. அவள் வகுப்பு ஆசிரியையிடம் முறையிட்டாள் ஆசிரியை அனைவரின் பையையும் சோதனையிட்டார். கார்த்திகா அம்மாவிடம் வந்து "நாமதான் அந்தப் பொருளை எடுக்கலியே! நம்ம பைய எதுக்கு சோதனை போடுறாங்கன்னு எனக்கு அழுகை அழுகையா வந்துச்சுமா!" என்றாள். அந்த சம்பவம் இப்போது ஞாபகத்திற்கு வந்தது.

"ஏன் கார்த்திகா! உனக்கு ஒரு நியாயம் மத்தவங்களுக்கு ஒரு நியாயமா? நீ மிஸ் கிட்ட சொல்லியிருந்தா அவங்க எல்லார் பையையும் சோதனை போட்டிருப்பாங்க! உன்பையை சோதனை போட்டப்ப உன் மனசு கஷ்டப்பட்ட மாதிரித்தானே மத்தவங்க மனசும் கஷ்டப்படும்?" என்றார் அம்மா. அவரே தொடர்ந்து "விலை உயர்ந்த பொருட்களை ஸ்கூலுக்குக் கொண்டுவரக் கூடாதுன்னு ரூல்ஸ் இருக்கு! அதையும் மீறி நீ கொண்டுபோனது முதல்தப்பு! பிரெண்ட்ஸ்கிட்ட நீங்க எடுத்தீங்களான்னு கேட்டது ரெண்டாவதுதப்பு! மிஸ்கிட்ட அவசரப்பட்டு கம்ப்ளெய்ன்ட் பண்ணப்போனது அடுத்த தப்பு! நாளைக்கு ஸ்கூலுக்கு போனதும் முதல் வேலையா உன் பிரெண்ட்ஸ் கிட்ட மன்னிப்பு கேளு!" என்றார் அம்மா. கார்த்திகா விற்குத் தான்செய்த தவறுகள் அனைத்தும் இப்போது ஒவ்வொன்றாய் புரிய வந்தது.

"சாரிம்மா! நான் இனிமே இந்தத்தப்பைச் செய்யமாட்டேன்! நாளைக்கு ஸ்கூலுக்குப்போனதும் என் பிரெண்ட்ஸ்கிட்ட மன்னிப்பு கேக்குறேன்!"-என்றாள் அவள்.




- 1492-வாசனைப் பொருட்களை ஆசியாவில் கொள்வனவு செய்யும் உரிமையை கொலம்பஸ் ஸ்பெயின் அரசிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.
- 1524 - இத்தாலிய நாடுகாண் பயணி ஜோவானி டா வெரசானோ நியூயோர்க் துறைமுகத்தை அடைந்தார்.
- 1861- அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியா கூட்டணியில் இருந்து விலகியது.
- 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் வட கரோலினாவின் பிளைமவுத் நகரைத் தாக்கினர்.
- 1895-சீன-ஜப்பான் போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஒப்பந்தம் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது.
- 1941- இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியப் பேரரசு ஜேர்மனியிடம் சரணடைந்தது.
- 2004-இந்தியத் திரைப்பட நடிகை சௌந்தர்யா பெங்களூரில் விமான விபத்தில் இறந்தார்.

**பிறப்புகள்**

- 1899-வின்செண்ட் விகில்சுவொர்த், பிரித்தானிய உயிரியலாளர் (இ.1994)
- 1910-அடிகளாசிரியர், தமிழகத் தமிழறிஞர் (இ.2012)
- 1915-சிறிமாவோ பண்டாரநாயக்கா, இலங்கையின் 6ஆவது பிரதமர் (இ.2000)
- 1916-ஆ. தியாகராசா, இலங்கை அரசியல் வாதி, கல்வியாளர் (இ. 1981)
- 1917-வ. சுப. மாணிக்கம், தமிழகத் தமிழறிஞர், கவிஞர் (இ. 1989)
- 1966-விக்ரம், தமிழ்த் திரைப்பட நடிகர்
- 1972-முத்தையா முரளிதரன், இலங்கைத் துடுப்பாளர்
- 1979-சித்தார்த், தென்னிந்தியத் திரைப்பட நடிகர், பாடகர்

**இறப்புகள்**

- 1680-கத்தேரி தேக்கக்விதா, அமெரிக்கப் புனிதர் (பி. 1656)
- 1989-மு. ச. காரியப்பர், இலங்கை அரசியல் வாதி (பி. 1899)

1992 - புலியூர்க் கேசிகன், தமிழக எழுத்தாளர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் (பி. 1923)

1994 - ரோஜர் ஸ்பெர்ரி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க மருத்துவர் (பி. 1913)

2004 - சௌந்தர்யா, தென்னிந்திய நடிகை (பி. 1971)

2013 - டி. கே. ராமமூர்த்தி, தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் (பி. 1922)

2013 - வி. எஸ். ரமாதேவி, கர்நாடக மாநிலத்தின் 13 ஆவது ஆளுநர் (பி. 1934)

2014 - கபிரியேல் கார்சியா மார்க்கேஸ், நோபல் பரிசு பெற்ற கொலம்பிய எழுத்தாளர் (பி. 1927)

2014  கர்பால் சிங், மலேசிய அரசியல்வாதி (பி. 1940)

2015  கி. லோகநாதன், மலேசியத் தமிழறிஞர், உளவியலாளர் (பி. 1940)

**சிறப்பு நாள்**

- உலக ஈமோபீலியா நாள்




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 70 | 40 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 90 | 90 | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 50 | 60 | 80 | 40 |
| தக்காளி | 30 | 30 | 20 | 40 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 20 | 40 | 40 | 50 | 50 | 80 |
| கரட் | 120 | 100 | 120 | 100 | 200 | 70 |
| பூசணி | 30 | 20 | 50 | 50 | 40 | 50 |
| புடோல் | 50 | 60 | 80 | 60 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 150 | 180 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 70 | 60 | 80 | 120 |
| பாகற்காய் | 100 | 160 | 180 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 80 | 60 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 60 | 40 | 100 |
| லீக்ஸ் | 180 | 200 | 180 | 150 | 240 | 120 |
| பீற்றூட் | 30 | 30 | 40 | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 120 | 80 | 60 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 200 | 200 | 240 | 400 |
| போஞ்சி | 100 | — | 100 | 120 | 200 | 100 |
| கத்தரிப்புள்ளா | 40 | — | 40 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 250 | 200 | 250 | 240 | 200 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 90 | 90 | 75 | 80 |
| இராசவள்ளி | 200 | 160 | — | 140 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 140 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | — | 50 | — | 80 | 30 |
| பொன்னாங்காணி | 45 | — | 30 | 40 | 30 | 35 |
| வல்லாரை | 15 | — | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | — | — | — | 80 | — |

விதைப்பதைவிட அறுப்பதே மிகுதி என்பது அறுவடையின் விதி.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்களவர் துன்பம் அறியாத எங்கள் அரசியல் தலைமை

ஆங்கிலப் புதுவருடம், தமிழ்ப் புத்தாண்டு, தைப்பொங்கல், தீபாவளி, கோயில் திருவிழா என அனைத்தையும் துறந்து காணாமல் போன தன் பிள்ளையை, வன்னிப் பெருநிலப் பரப்பில் பறிகொடுத்த உயிர்களை நினைந்தபடி வாழுகின்ற தமிழ் மக்கள் பற்றி ஒரு கணமேனும் நாம் சிந்திக்க வேண்டும்.

அந்தச் சிந்தனை நம்மிடம் இல்லையாயின் இந்தப் பிறப்பில் நமக்கு எழுதப்படும் பாவத்தைத் தீர்க்க இன்னும் பல பிறப்புக்கள் எடுக்க வேண்டியிருக்கும்.

மண் மீட்புப் போர் நமக்கானது; மண் மீட்புப் போரில் தம் இன்னுயிரைத் தியாகம் செய்தவர்கள் நமக்கானவர்கள்.

ஒவ்வொரு தாக்குதல் சம்பவங்களின் போதும் நம் பிள்ளைகள் உடலில் குண்டைச் சுமந்து மனித வெடிகுண்டாக வெடித்தபோது அதனை வியந்து நாட் கணக்கில் பேசியவர்கள் நாங்கள்.

மற்றவரின் உயிர்த் தியாகத்தை தேர்தல் மூலதனமாக ஆக்கி, மேடைகளில் முழங்கி வாக்குப் பெற்று அரசியல் பதவியை எடுத்துக் கொண்டவர்கள் நம் அரசியல்வாதிகள்.

ஆனால் இன்று அவர்கள் அனைத்தையும் மறந்துவிட்டார்கள். எங்களைத் தமிழ் மக்கள் எதுவும் செய்ய முடியாது என்ற திமிர்த்தனம் நம் அரசியல் தலைமையிடம் வந்துவிட்டது.

கொள்கை, கோட்பாடு, தமிழ் மக்களின் உரிமை என அனைத்தும் மறக்கப்பட்டுவிட்டன.

இப்போது தென்பகுதியில் அரசு தரப்பு நடத்தும் விழாக்களிலும் விருந்துபசார நிகழ்வுகளிலும் கலந்து கொள்வதிலேயே நம் அரசியல் தலைவர்களின் காலம் கடக்கிறது.

இதை நாம் கூறினால் நாமே பகையாளர்களாகின்றோம். தமிழ் அரசியல் தலைமைக்கு எதிராக எழுதுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றோம்.

எதுவாயினும் எங்கள் உறவுகள் ஒவ்வொரு நாளும் கண்ணீர் விடும் பரிதாபத்தைக் கண்டு கொள்ளாத எந்தக் கயவரையும் கடவுள் மன்னிக்க மாட்டான் என்பது நம் அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆம், கேப்பாப்பிலவு மக்களுக்கு புத்தாண்டு இல்லை, பண்டிகைக் கொண்டாட்டங்கள் இல்லை, தமிழ் அரசியல்கைதிகளுக்கு விடியலோ இ;ல்லை, காணாமல்போன உறவுகளுக்கு இந்த உலக வாழ்வே வெறுத்துவிட்டது.

நிலைமை 'இதுவாக இருக்கையில், புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதுதான் எங்களின் முதல்வேலை என்று எங்கள் தமிழ் அரசியல் தலைமை முடிவெடுத்ததெனில்,

இ;வர்களை நம்புவது அறிவுபூர்வமானதா? என்பதை நாமே நம்மிடம் கேட்டுக் கொள்வது தான் ஒரே வழி.

பதவிக்காக, எதிர்காலத் தேர்தல் ஆசனத்துக்காக அவர்களைச் சிலர் போற்றலாம். புகழ்ந்து பாடலாம்.

ஆனால் இ;ந்தப் பிரபஞ்சத்தைப் படைத்துக் காத்து அருளும் கடவுள் இவற்றை ஒரு போதும் மன்னிக்க மாட்டார் என்பதை மட்டுமே நாம் உறுதியடக் கூறமுடியும்.

## மதங்களுக்கு இடையே குரோதம்

# பேஸ்புக் நிர்வாகிக்கு இலங்கையைச் சேர்ந்த 12 சிவில் அமைப்புக்கள் பகிரங்கக் கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் மதங்களிற்கு இடையே குரோதங்களைப பரப்புவதற்கு பேஸ்புக்கை பயன்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என 12 சிவில் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையைச் சேர்ந்த 12 சிவில் அமைப்புக்கள் இது தொடர்பில்பேஸ்புக்கின்பிரதான நிர்வாகிக்கு பகிரங்கக் கடிதமொன்றை எழுதியுள்ளன.

இலங்கையில் மதங்களிற்கு இடையே குரோதத்தினை பரப்புவதற்கு பேஸ்புக் பயன்படுத்தப்படுவதை சுட்டிக் காட்டியுள்ள சிவில் அமைப்புக்கள் இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். சமூக தராதரங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளன.

மதங்களுக்கிடையில்குரோதங்களை பரப்புவதற்கும் பெண்களிற்கு எதிரான வன்முறைகளிற்காகவும் பேஸ்புக் இலங்கையில் பயன்படுத்தப்படுவது குறித்து தங்கள் அமைப்பு தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றது என மாற்றுக்கொள்கை நிலையத்தை சேர்ந்த ரைசா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் இனக்குரோதங்களையும் பெண்களிற்கு எதிரான வன்முறைகளையும் தூண்டும் பதிவுகளிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை வரவேற்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முஸ்லிம்களிற்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளின்போது அனைத்து முஸ்லிம்களையும்கொலை செய்யவேண்டும் என தெரிவிக்கும் பதிவொன்று சிங்களத்தில் முகப்புத்தகத்தில் ஆறு நாட்கள் தொடர்ச்சியாக வெளியாகியிருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் இனக்குரோதம் தொடர்பில் ஆராய்ச்சி செய்து அது குறித்த அறிக்கையை பேஸ்புக்கிற்கு அனுப்பி வைத்தோம். ஆனால் உரிய பதில்கள் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனக்குரோதம் மற்றும் பெண்களிற்கு எதிரான வன்முறைகளை ஊக்குவிக்கும் பதிவுகள் வெளியாகியுள்ளது குறித்து நாங்கள் சுட்டிக் காட்டும்போது பேஸ்புக் தரப்பிலிருந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. இது குறித்து நாங்கள் ஏமாற்றம் அடைந்துள்ளோம்என அவர்மேலும தெரிவித்துள்ளார். (இ-7)

## கடந்த 60 நாட்களில் நீரில் மூழ்கியதால் 93 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் 60 நாட்களில் 93 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த வருடத்தில் 728 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், இதில் 150 பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த 728 பேரில் 100 பேர் 19 வயதுக்கு குறைந்தவர்களென குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த 2016 ஆம் ஆண்டு 377 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், இதில் 177 பேர் பெண்கள் எனவும், இதில் 105 பேர் 19 வயதுக்கு குறைந்தவர்கள் எனவும்பொலிஸ்தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம)

## வீதி விபத்து; நால்வர் பலி

திஸ்ஸ - மாத்தறை பிரதான வீதியின் அம்பலாந்தோட்டை மிரிஜ்ஜவல சந்தியில் முச்சக்கரவண்டி ஒன்றுடன் பஸ்வண்டி ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த நால்வருமே உயிரிழந்துள்ளனர். (ம)

# இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையிலான கைதிப்பரிமாற்ற சட்டமூலத்திற்கு ஒப்புதல்

(கொழும்பு)

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் குற்றவாளிகளைப் பரிமாற்றிக் கொள்வதற்கான கைதிப்பரிமாற்ற சட்டமூலம் ஒன்றிற்கு ஈரான் நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஈரானிய ஊடகங்கள் இந்த தகவலை வெளியிட்டுள்ளன.

இந்த சட்ட ஏற்பாட்டின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில குற்றவாளிகள் மற்றும் குற்றங்கள் சார்ந்த தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

15 ஈரான் நாட்டவர்கள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அதேவேளை, 3 இலங்கையர்கள் ஈரானில் சிறை வைக்கப்பட்டுள்ளதாக ஈரானிய சட்டத்துறையைச் சேர்ந்த ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உடன்படிக்கை அமுலாக்கப்படுவதன் ஊடாக, குறித்த குற்றவாளிகளை தங்கள், தங்கள் நாடுகளில் தடுத்து வைப்பதற்கான வழி ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வலி.தெற்கில் நடைபாதை வியாபாரத்திற்குத் தடை

வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து இடங்களிலும் நடைபாதை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்று சபையால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதற்கமைவாகவும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் முகமாகவும் நடைபாதை வியாபாரத்தினை மேற்கொள்ள முடியாது என்பதுடன் அவ்வாறு நடைபாதை வியாபாரம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பட்சத்தில் வியாபாரப் பொருட்கள் சபையால் அகற்ற ப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன் என தவிசாளர் க.தர்ஷன் அறிவித்துள்ளார். (இ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண் ஒருவர் படுகொலை

(கொழும்பு)

தவுலகல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

காணிப் பிரச்சினை காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஒஸ்நிகொடவத்த பகுதியை சேர்ந்த 54 வயதுடைய ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் கணவனுடைய சகோதரனால்தான் இந்த கொலை இடம்பெற்றுள்ளதாகவும் சந்தேக நபரை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**புதுவிழாவில் காலையில் செய்யும் பூஜைகள் எவை?**

வீட்டு உரிமையாளரை அவரது துணைவியாருடன் மனையில் அமரச் செய்து வேள்வித்தீ எழுப்பி கலச வழிபாடு, புண்ணியகவாசம், செய்ய வேண்டும். (இக்காலம் பிள்ளையார் அகவல் படிப்பது சிறப்பு)

வேள்வித் தீயில் விநா யகரை ஆவாஹனம் செய்து அந்தத் தீ கொண்டு அடுப்பில் தீ எழுப்பி பால் காய்ச்சுதல் வேண்டும். பால் காய்ச்சுவதற்கு முன் அடுப்பிற்கு மஞ்சள், குங்குமம் இட்டு பழம் நிவேதனம் செய்து கற்பூர ஒளிபாட்டி வணங்குவது நன்று.

தம்பதிகள் வேள்வியைத் தொடர வேண்டும். இக்காலம் பிள்ளையார் போற்றி நானூறு பதிகத்தை பாட பிள்ளையார் அருள் பூர்ணமாகக் கிடைக்கும்.மந்திர புஷ்பம் சாத்துதல், வேள்விப் பிரசாதம் பெறுதல் போன்ற பூஜைகளை முடித்து தீபத் திருமகள் வழிபாடு செய்து மனைவிழா பூர்த்தி செய்தல் வேண்டும்.

*(தொடரும்)*

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனித வடிவம் கொண்ட அனைத்து உயிரையும் வழிபடுங்கள், பகவானை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழி.
- இரக்கத்தால் மனிதருக்கு நன்மை செய்வது நல்லது. ஆனால், இறைவனின் படைப்பான அனைத்து உயிர்களுக்கும் பணி செய்வது மிக மிக நல்லது.
- வாழ்க்கையில் இனிமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பது ஒருவனை இறைவன் அருகில் கொண்டு செல்லும்.
- நம்மிடத்தில் நம்பிக்கை கடவுளிடத்தில் நம்பிக்கை - இதுவே வெற்றி பெறுவதின் ரகசியம்.
- வெற்றி பெறுவதற்கு, நிறைந்த விடாமுயற்சியையும் பெரும் மன உறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.
- அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் நமக்குத் தேவையில்லை, வளர்ச்சி அடைவது தான் வாழ்க்கை.
- புனிதமான எண்ணங்களை தொடர்ந்து சிந்தித்தபடி, அனைவருக்கும் நன்மை செய்து கொண்டிருங்கள்.

# இளைஞர் சேவை மன்ற விளையாட்டுப் போட்டி வடக்கு நண்பர்கள் இளைஞர் கழகம் சம்பியன்











முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான இவ்வாண்டுக்கான விளையாட்டு விழா இடம்பெற்றது. இந்த விளையாட்டு விழாவில் உடையார்கட்டு வடக்கு நண்பர்கள் இளைஞர் கழகம் வெற்றிவாகை சூடியுள்ளது.

இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 20 இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை உடையார்கட்டு தெற்கு விளையாட்டு மைதானத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் க.கவிச்சந்திரன் தலைமையில் ஆரம்பமானது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டதோடு நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்ததோடு பிரதேசத்தின் இளைஞர், யுவதிகள், விளையாட்டு ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

விளையாட்டு விழாவில் உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் கோம்பாவில் சிறி விக்னேஸ்வரா இளைஞர் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு கிழக்கு விடியல் இளைஞர் கழக அணி மோதிக்கொண்டது. போட்டி முடியும் வரை இரு அணிகளும் எந்தவித கோல்களை யும் போடாத நிலையில் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் புதுக்குடியிருப்பு கிழக்கு விடியல் இளைஞர் கழக அணி வெற்றிபெற்றது.

அத்தோடு ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் 109 புள்ளிகளை பெற்று மாணிக்கபுரம் உதயம் இளைஞர் கழகம் மூன்றாம் இடத்தையும் 116 புள்ளிகளைப் பெற்று தேராவில் இளம்தென்றல் இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றதோடு 155 புள்ளிகளைப் பெற்று உடையார்கட்டு வடக்கு நண்பர்கள் இளைஞர் கழகம் வெற்றிவாகை சூடியது.

வெற்றி வீரர்களுக்கான பதக்கங்களை அணிவித்து சான்றிதழ்கள், நினைவுப் பரிசில்கள், கேடயங்களை நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (க-281)

## கட்டைக்காடு சென்.மேரிசை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது வெண்மதி





அம்பன் பிங்பொங் விளையாட்டுக்கழகம் நடத்திய வடமராட்சி கிழக்கு கழகங்களுக்கிடையிலான மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும் நாகர்கோவில் வெண்மதி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வெண்மதி விளையாட்டுக் கழகம் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய வெண்மதி விளையாட்டு கழகத்தினர் நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். அதிகபட்சமாக கஞ்சுகன் 48 ஓட்டங்களை தனது அணிக்காக பெற்றுக்கொடுத்தார். 84 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு களமிறங்கிய கட்டைக்காடு சென்.மேரிஸ் அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் 60 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் சுகீசன், கோகுலன் தலா 2 விக்கெட்டுக்களையும் சங்கர் மற்றும் கௌசிகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இறுதியில் 23 ஓட்டங்களால் நாகர்கோவில் வெண்மதி அணியினர் வெற்றியைப் பெற்றுக்கொண்டனர். போட்டியின் ஆட்ட நாயகனாக வெண்மதி விளையாட்டுக் கழகத்தின் கஞ்சுகன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## அனைத்துப் போட்டியிலும் சிறப்பாட்டம் கிண்ணத்தைச் சுவீகரித்தது யூகே அணி



இருபாலை-கற்பகாஸ் வி.கழகத்தினரால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் யூகே அணி சம்பியன் பட்டம் வென்று அசத்தியது. முதல் சுற்றுக்களில் யாழில் பலம்வாய்ந்த அணிகளான கிங்ஸ் ஸ்ரார், நல்லூர் றோயல்ஸ், கோப்பாய் காளி அம்பாள், உடுவில் அம்பாள் ஆகிய நான்கு கழகங்களையும் வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் மாதனை விளையாட்டுக் கழகத்தை முறையே 14:16, 12:15, 15:08,15:02 & 15:09 எனும் புள்ளி அடிப்படையில் அபார வெற்றி கொண்டு சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது யூகே அணி (க)

## கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் விங்ஸ் அணி 2 வது சுற்றுக்கு தகுதி



கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்திற்கான வெற்றி விழா தொடரின் 6 ஆவது போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது விங்ஸ் அணி, சிறிகாமாட்சி அணியை 3 இலக்குகளால் வெற்றி பெற்று 2 வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 29.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 192 ஓட்டங்களை பெற்றனர். துவாரகன் -23 , சுஜன் -49 , சுதர்சன்-29, பவிந்திரன் ஆட்டமிழக்காது-20, யாதவன் -10 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் விங்ஸ் சார்பாக சுரேன், ஜெரிஜோன்சன் தலா 2 இலக்குகளையும் வின்சன் , மைக்கல் ,ஜெவர்சன், நிதுஸன், வினோராஜ் தலா-1 இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி 29.1 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 195 ஓட்டங்களை பெற்றனர். ஜெரிஜோன்சன்-17, ஒநாசியஸ்-24 ,விநோத் -12 ,நிதூஸன் ஆட்டமிழக்காது-39, விதுஸன்-23, மைக்கல்-16, சுரேன் ஆட்டமிழக்காது-22 ஓட்டங்களை பெற்றனர். விருஸன், சுதர்சன் தலா 2 இலக்கினையும் ஜனார்த்தன், பிரதாப் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு விங்ஸ் அணி 6.25 புள்ளிகளையும் சிறிகாமாட்சி அணி 2.02 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது.(இ)

## விடுவிக்கப்பட்ட வலி...

மேலும் அதிகாரிகளின் அசமந்த போக்கினால் அகற்றப்படாமல் உள்ள இவ் வெடி பொருட்களில் பல அங்கிருந்து களவாடப்பட்டு செல்லப்படுவதாகவும் அப் பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வலி.வடக்கில் 28 ஆண்டுகளின் பின்னர் இராணுவத்தினர் வசமிருந்த கட்டுவன், மயிலிட்டி மேற்கு பகுதியில் உள்ள 683 ஏக்கர் காணியானது மீள பொது மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் தமது காணிகளை விரைவாக துப்புரவு செய்து வரும் நிலையில் அங்கு இராணுவம் பயன்படுத்திய ஆபத்தான வெடி பொருட்கள் முழுமையாக அகற்றப்படாது காணப்படுகின்றது.

குறிப்பாக வீட்டின் கிணற்று நீர் தொட்டிகளுக்குள் போடப்பட்ட நிலையில் 16 மில்லி மீற்றர் நீளமான மோட்டார் குண்டுகள் மற்றும் வேறும் பல வெடி பொருட்கள் வெடிக்காத நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையில் இவ் வெடி பொருட்களை அங்கிருந்து அகற்றுமாறு பொது மக்கள் அப் பகுதி கிராம சேவகர், பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு அறிவித்திருந்தனர். எனினும் சித்திரை புத்தாண்டு காலம் என்பதால் அதனை அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவ் அதிகாரிகள் தெரிவித்ததாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை காணிகளானது கையளிக்கப்பட்டவுடனேயே இவ் வெடி பொருட்களை கண்ட பொதுமக்கள் அதனை அகற்றுமாறு அதிகாரிகளுக்கு தெரிவித்தும் அதிகாரிகளின் அசமந்த போக்கினால் அவை அகற்றப்படாத நிலையில் அவ் வெடி பொருட்களில் பல வெடி பொருட்கள் பழைய இரும்பு பொறுக்க வருபவர்களாலும் வேறு சிலராலும் களவாடப்பட்டு செல்லப்படுவதாகவும் அப் பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளில் வெடிப்பொருட்கள் அல்லது சந்தேகத்துக்கு இடமான பொருட்களை அவதானித்தால், உடனடியாக இராணுவத்துக்கு தெரியப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு இராணுவப்பேச்சாளர் சுமித் அத்தபத்து தெரிவித்தார். (ம-4)

## 12 பேர் பலி; 69 பேர்...

காலப்பகுதியில் குடிபோதையில் வாகனத்தை செலுத்திய 140 சாரதிகள் கைது செய்யப்பட்டதோடு, 166 சாரதிகள் மீது வாகனத்தை வேகமாக செலுத்தியமை தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்டதோடு, விதிகளை மீறி வாகனத்தை செலுத்திய 22 சாரதிகள் தொடர்பிலும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## 5 பெண் பிள்ளைகளின்...

அராலி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னையா-சற்குணராஜா (வயது 51) என்ற ஐந்து பெண் பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு அலரி விதை உட்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் இதற்கு முன்னர் மூன்று தடவைகள் அலரி விதை உட்கொண்டு தப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## பிணை கிடைத்தும்...

அமைச்சராகவிருந்த போது 53 மில்லியன் ரூபாய் அரச நிதியை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே அவர் நேற்று காலை நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டார். விசாரணையின் நிறைவில் அவர் கைது செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று பிற்பகல் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை நிபந்தனையுடனான பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)

## கிருமி நாசினி அருந்திய...

ற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் குமரபுரம் பரந்தன் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி சிவலிங்கம் (வயது 61) என்ற குடும்பஸ்தரே நெடுநாளாக இருந்து வந்த சிறுநீரக நோயை தாங்க முடியாது கடந்த 11ஆம் திகதி மதுபானத்துடன் கிருமி நாசினியையும் அருந்திவிட்டு மனைவிக்கு தான் கிருமி நாசினி அருந்தியதாக கூறியுள்ளதுடன் வீட்டிலே மயக்கமடைந்து பின்னர் உடனடியாக இவர் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு கொண்டு சென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டுள்ளார். (ம-9)

## தேவாலயத்துக்குச் செல்ல...

தற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்து வருகின்றனர். யாழ்ப்பாண கோட்டையை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், தற்போது தொல்லியல் திணைக்களத்தினர் கோட்டையை புனரமைப்பு செய்யும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் கோட்டைக்குள் நிலை கொண்டுள்ள இராணுவம், குறித்த தேவாலயத்தை தமது படை முகாமாக பயன்படுத்தி வருவதோடு, தேவாலயத்திற்குள் யாரும் செல்லாதவாறு நிலை கொண்டுள்ளது. உள்ளூர் வாசிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் குறித்த இடத்திற்கு செல்வதற்கும் இராணுவம் தடை விதித்துள்ளது. இது தவிர அங்குள்ள அரச மரம் ஒன்றின் கீழ் புத்தர் சிலை ஒன்றை இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

மேலும் தொல்லியல் திணைக்களத்தினர் குறித்த தேவாலயத்தில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தேவாலயத்தில் நிலை கொண்டுள்ள இராணுவம் இடையூறாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண கோட்டையில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட இந்த கத்தோலிக்க தேவாலயமானது கி.பி 1702ஆம் ஆண்டு ஒல்லாந்து தேசக் கட்டடக்கலை நிபுணரான மார்ட்டீன் லூயிஸ்காம் தலைமையில் கிரேக்க சிலுவை வடிவில் அமைக்கப்பட்டது.

இந்த தேவாலயத்தினது சுவர்கள் தூண்கள், கதவு, வளைவுகள், மற்றும் யன்னல் வளைவுகள் போன்ற வேலைப்பாடுகளுக்கான செங்கற்கள் ஒல்லாந்து தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டன. அத்துடன் இந்த தேவாலயத்தினுள் ஒரே நேரத்தில் 600 பேர் வரையில் நின்று வழிபடக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## 6 நாடாளுமன்ற உறுப்பி...

வித்துள்ளார்.

பொலநறுவை தியபெத்தும பெரகும்கம ஸ்ரீ ஞானோத்தியாராமய விகாரையில் சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு தலைக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலுள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பிலிருந்து விலகிக் கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருந்தது.

எனினும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த முடிவை நிராகரித்த பிரதி சபாநாயகர் உட்பட அக்கட்சியிலுள்ள 6 அமைச்சர்கள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்ததனால் சுதந்திரக் கட்சிக்குள் பிளவுநிலை ஏற்பட்டது.

அமைச்சர்களான திலங்க சுமதிபால,

# லண்டன் நகரில் இடம்பெற்ற தலைக்கு எண்ணெய் வைக்கும் சடங்கில் ஜனாதிபதியும் இணைவு

(லண்டன்)

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று லண்டன் நகரில் உள்ள பௌத்த விகாரையில் இடம்பெற்ற தலைக்கு எண்ணெய் தேய்க்கும் புத்தாண்டு சடங்கில் கலந்து கொண்டார்.



பிரித்தானியாவின் பிரதான சங்கநாயக்கர், லண்டன் பௌத்த விகாரையின் விகாராதிபதி வண. போகொட சீலவிமல நாயக்க தேரர் இதன்போது ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு சம்பிரதாய முறைப்படி தலைக்கு எண்ணெய் தேய்த்து ஆசீர்வாதம் வழங்கினார்.

அதன் பின்னர் விகாரையில் இடம்பெற்ற சமய அனுஷ்டானங்களிலும் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

லண்டனில் வசிக்கும் இலங்கையர்களும் விகாரைக்கு வருகை தந்திருந்ததுடன், அவர்களோடு சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

தயாசிறி ஜயசேகர, எஸ்.பி திஸாநாயக்க, டிலான் பெரேரா, சந்திம வீரக்கொடி, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, அநுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட 16 உறுப்பினர்கள் இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து 6 அமைச்சர்கள் தங்களது பதவிகளை இராஜினாமா செய்த அதேவேளை, எதிர்க்கட்சியாக செயற்பட தீர்மானித்ததாகவும் ஆனால் சுதந்திரக் கட்சியை பலப்படுத்தும் விவகாரத்தில் ஒத்துழைப்புடன் செயற்படுவோம் என்றும் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே அவர்களை தம்பக்கம் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். (ம)

## சபையை இழந்ததையடுத்து...

உறுப்பினர்களான சத்தியலிங்கம், சிவாஜிலிங்கம் ஆகியோருடன் தர்க்கப்பட்டனர். சுமந்திரன் எம்.பி, அடைக்கலநாதன் எம்.பி ஆகியோர் உடனடியாக அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டனர். சிவாஜிலிங்கத்துடன் சிறிது நேரம் தர்க்கம் நீடித்தது.

இதேவேளை, த.வி.கூட்டணிக்கு ஆதரவளித்த ஈ.பி.டி.பி உறுப்பினர்களுடன் முரண்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் தகாத வார்த்தைகள் பேசி முரண்பட்டனர்.

இதேவேளை, ஐ.தே.கட்சியின் பெண் உறுப்பினரை வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்களின் தரப்பினர் கடத்தி சென்றே கூட்டமைப்புக்கு எதிராக வாக்களிக்க வைத்ததாக ஐ.தே.கட்சியின் வவுனியா அமைப்பாளர் கருணாதாச குற்றம் சுமத்தினார். ஆனால் அங்கு வந்த அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்களின் சகோதரரும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான றிப்கான் பதியுதீன் அதனை மறுத்திருந்தார். குறிப்பிட்ட பெண் வேட்பாளரும் அந்த குற்றச்சாட்டை மறுத்து தனது விருப்பப்படியே செயற்பட்டதாக சபை தவிசாளர் தெரிவில் தெரிவித்தார்.

இதன்பின் அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்களின் சகோதரருக்கும், ஐ.தே.கவின் அமைப்பாளருக்குமிடையில் கைகலப்பு ஏற்படும் நிலையேற்பட அங்கிருந்தவர்கள் நிலைமையை சமாளித்தனர். (ம-250)

## கைச்சாத்திட்ட அனைவரை...

வாங்கும் நோக்கில் எம்மை கைது செய்ய சதித்திட்டம் தீட்டி வருகின்றது. இதன் ஒரு வெளிப்பாடாகவே பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவின் கைது அமைந்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

சதொச நிறுவன நிதிமோசடி தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று நிதிக் குற்றப் புலனாய்வு பிரிவில் வாக்குமூலமளிக்க வருகை தந்திருந்தார்.

இதன்போது அமைச்சரின் உதவிக்காக வருகை தந்திருந்த வேளையிலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையினை கொண்டுவருவதற்கு முழு மூச்சாக செயற்பட்டவர் மகிந்தானந்த அளுத்கமகே. இதனாலேயே அவரை தற்போது கைதுசெய்துள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் அப்பிரேரணையில் பிரதமருக்கு எதிராக கைச்சாத்திட்ட எம் அனைவரையும் கைது செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறும்.

பிரதமரை கட்சித் தலைமையிலிருந்தும் பிரதமர் பதவியிலிருந்தும் விலகுமாறு கூறப்பட்டது. இதனை ஏற்றுக் கொள்ளாது தனது நலன்களுக்காகவும் சட்டங்களை மாற்றிக் கொண்டு பழி வாங்கல் அரசியலையே தற்போது அவர் நிகழ்த்திக் கொண்டுள்ளார் என்றார். (ம)

## பல்கலைக் கழகங்கள்...

டிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் அரசுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை யடுத்து கடந்த வியாழக்கிழமை வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டதாக கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்கம் அறிவித்திருந்த நிலையில், இன்றைய தினம் அனைத்து பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளும் ஆரம்பமாகின்றன. (ம)

## நல்லாட்சி அரசிலும்...

அவ்வாறு அரசாங்கத்திற்குள் இனவாதிகள் இல்லை என்றால் ஜனாதிபதியும் பிரதமரும் தன்னிடம் கூறலாம் என்றும், அதற்கு தான் பதிலளித்துக்கொள்வதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு, இலங்கையர் என்று கூறினால் சிலர் கோபப்படுவதாக குறிப்பிட்ட அமைச்சர், இலங்கையர் என்ற அடையாளத்திற்குள்ளேயே சகல விடயங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார். இலங்கையர் என்றால் தமிழர் என்ற அடையாளத்தை அழிப்பதாக சிலர் நினைப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், அது தவறான அர்த்தம் என்றும் இலங்கையர் என்ற அடையாளத்தை அழிக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன் என்றும் இதன்போது குறிப்பிட்டார். (ம)

## விடந்தையடி பகுதி...

தரன் என்பவரது தோட்டக் காணியில் உரப்பையில் சுற்றப்பட்டு மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டை தருமபுரம் பொலிஸார் மீட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர்.விமல குணரட்ண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

புளியம்பொக் கணை விடந்தை யடி என்ற இடத்தில் லம்போதரன் என்பவரது தோட்டக்காணியை நேற்றைய தினம் பண்படுத்தும் போது மண்ணில் புதையுண்ட நிலையில் ஒரு உரப்பை தென்பட்டதை அடுத்து காணி உரிமையாளரால் தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு சென்ற தருமபுரம் பொலிஸார் மண்ணை தோண்டி உரப்பையை வெளியே எடுத்து பரிசோதனை செய்த போது துருப்பிடித்த நிலையில் ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டு காணப்பட்டுள்ளன. (ம-15)

**பிரத்தியேக வகுப்பு**

A/L பொறியியல் தொழில்நுட்பவியல் பாடமானது பல்துறை பட்டயப் பொறியியலாளரினால் (Charted Engineer) பிரத்தியேகமாகவும், குழுவாகவும் கற்பிக்கப்படும். (3626)

**தொடர்பு: 0752087288**

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**

UK - 550*/= Kg

கனடா - 1050*/= Kg

DELIVERY IN 3-5 DAYS

(C-1982)

தொடர்புகளுக்கு 0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

**உடனடி வேலைவாய்ப்பு**

Dynamic கம்பனியில் முகாமைத்துவதுறையில் தொழில் புரிய ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ!

- அனுபவம் தேவையற்றது.
- குறுகிய காலத்துக்குள் பதவி.
- O/L அல்லது A/L தகைமை.
- நிரந்தர வேலைவாய்ப்பு.

(3656)

எம்முடன் இணையும் உங்களுக்கு ஆரம்பம் 15,000/= பின் 40,000/= மேல், தங்குமிட வசதிகள், வெளி மாவட்டத்தாரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:

**0771571699, 0766668385**

நூற்றுக்கணக்கான நாடுகளில் கிளைகளைக் கொண்ட அமெரிக்க நிறுவனங்களான

McDonald's Marriott. HOTELS & RESORTS

**ஆகியவற்றில் வேலைவாய்ப்பு ஏற்பாடு!**

அல்லது

ஜேர்மன் உல்லாசப் பயணக் கப்பல் வேலைவாய்ப்பு!

அல்லது

சுவிஸ், அவுஸ்ரேலியா, சிங்கப்பூர் நியூசிலாந்து, கனடா விசா ஏற்பாடு என்பவற்றுடன்

O/L உடன் விரும்பிய நாடு சென்று 50,000 – பல இல. சம்பாதிக்க

10ம் அணி TOURISM & **Hotel Management** 4 MONTHS DURATION

Entry Level with FREE ENGLISH COURSE

புதிய பிரிவு ஆரம்பம் ஏப்ரல் 23 திங்கள்

பதிவுகளுக்கு **0777 324 004**

9வது ஆண்டில் 9th Year

SIKARAM ACADEMY

Business - Hospitality - English

FAST TRACK to CAREERS

Sri Lankan Entrepreneur of the Year 2017

(C-2244)

இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

021 221 9 221 www.sikaram.lk

FLC FRENCH LANGUAGE CENTRE

**FRENCH** வகுப்புக்கள்

V. ஜெகன் (Trained in France- 2007)

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட Diplomas.

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 21.04.18 சனி காலை 8 மணி.

181, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973 ஆரம்பம் :23.04.18 மாலை 4 மணி

திருமணம் ஆகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (C-2140)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(3609)

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

அக்ஷய திருதியை நன்நாளில் தங்க நகைகளை வாங்கிட ராசியான தங்க மாளிகைக்கு வாரீர் வாரீர்



யாரேனும் சங்கானையில் நகை வாங்க வந்தால் பாரெங்கும் அவர்கள் நாவில் பேசப்படுவது

**ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்**

நாளை (18.04.2018) புதன்கிழமை அக்ஷய திருதியை தினத்தை முன்னிட்டு விசேட கழிவுகளுடன் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்.



(C-2241)

K.T பிளாசா, பிரதான வீதி, சங்கானை.

குறிப்பு: தங்க நகை வாங்குபவர்களுக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்படும்

# அகிலா நகை மாடம்

## காக்கா கடைச்சந்தி, யாழ் வீதி, கிளிநொச்சி.

**0212283559, 0763490023**

அகிலாவின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.
அட்ஷய திருதியை முன்னிட்டு தங்க நகைகளை
முற்பதிவு மற்றும் கொள்வனவு செய்து
தங்க நாணயம் ஒன்றினைப் பரிசாக வென்றிடுங்கள்.





கிளை: நவீனா நகை மாடம்

இல.191, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(C-2240)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.